12 ஆம்

வகுப்பு

# வரலாறு

தமிழ் வழி

# மேல்நிலை இரண்டாமாண்டு
# **வரலாறு** தமிழ்வழி சிறப்புக்கையேடு
## கிருஷ்ணகிரி மாவட்டம்

**2024-2025**

**தலைமை**

திருமதி. **க.பெ. மகேஸ்வரி,**
முதன்மைக்கல்வி அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம்

## ஒருங்கிணைப்பாளர்கள்:

திருமதி. **ப. சரவணன்** மாவட்டகல்வி அலுவலர் பொறுப்பு, கிருஷ்ணகிரி மா.வ.

திரு.**சி. சிவராமன்** மாவட்டகல்வி அலுவலர் பொறுப்பு, கிருஷ்ணகிரி மா.வ

முனைவர். **மு. வெங்கடேசன்,** சி.இ.ஓ, நேர்முக உதவியாளர் (மே.நி.க.) கிருஷ்ணகிரி மா.வ.

திரு.**எஸ்.வடிவேல்** உதவி திட்ட அலுவலர், (மு.க.அ) கிருஷ்ணகிரி மா.

முனைவர்.**பொ.ஜெ.முரளி,** தலைமை ஆசிரியர், அமேநி பள்ளி, பாளூர்.

திரு. **ச. ஜான் பாக்கியம்,** உதவி தலைமையாசிரியர், ந. நி. பள்ளி, இராசு வீதி, கிருஷ்ணகிரி.

**பாடஆசிரியர்கள் குழு** :

தி. திம்மராஜ் – அரசு ஆண்கள் மேநிப கிருஷ்ணகிரி
சி. சந்தன் – அரசு பெண்கள் மேநிப ஓசூர்
எஸ்.ஆர். பாரதி – அரசு பெண்கள் மேநிப காவேரிப்பட்டிணம்
ரா. வரதராஜன் – அரசு மேநிப நெடுங்கல்
இரா. உமாதேவி – அரசு பெண்கள் மேநிப இராயக்கோட்டை
தி. கவிதா – அரசு பெண்கள் மேநிப கிருஷ்ணகிரி
வே. அன்பு – அரசு ஆண்கள் மேநிப காவேரிப்பட்டிணம்
பே. சீனிவாசன் – அரசு மேநிப மத்திகிரி

12-ஆம் வகுப்பு

## ஒரு மதிப்பெண் வினாக்கள் (HISTORY)

12-ஆம் வகுப்பு வரலாறு பாடப்புத்தகத்தில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள், GeoGebra மென்பொருளின் உதவியோடு,ஒரு வினாவிற்கு சரியான விடையை தேர்வு செய்ய ,அதிகபட்சம் மூன்று வாய்ப்புகள் வழங்கி, மாணவர்களின் கற்றல் ,கற்பித்தல் திறன் அதிகரிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம் .

குறிப்பு :Hi-Tech Lab-ல் QR Code ஐ-Scan செய்து அல்லது Link ஐ-click செய்து மாணவர்கள் பயிற்சி செய்யும் விதமாக மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது .

| HISTORY | TAMIL MEDIUM | ENGLISH MEDIUM |
|---|---|---|
| QR | | |
| LINK | https://www.geogebra.org/m/m9c8nswa | https://www.geogebra.org/m/durnn7t2 |

Dr. MURALI. B. J HM,
GHSS BARUR, KRISHNAGIRI.

KALIYAPPAN .N ,PG ASST
GHSS MORANAHALLI, KRISHNAGIRI

## ஒரு மதிப்பெண் வினாக்கள்

### பாடம் – 1

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு இந்தியா திரும்பினார்?
   **(அ) 1915** (ஆ) 1916 (இ) 1917 (ஈ) 1918
2. இந்தியாவில் ஆங்கிலக் கல்வி எந்த ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது?
   (அ) 1825 **(ஆ) 1835** (இ) 1845 (ஈ) 1855
3. மாறுபட்ட ஒன்றைத் தேர்வு செய்க.
   (அ) வில்லியம் ஜோன்ஸ் (ஆ) சார்லஸ் வில்கின்ஸ் (இ) மாக்ஸ் முல்லர் **(ஈ) அரவிந்த கோஷ்**
4. "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை" அதை அடைந்தே தீருவேன்" – எனக் கூறியவர்
   **(அ) பாலகங்காதர திலகர்** (ஆ) தாதாபாய் நௌரோஜி (இ) சுபாஷ்சந்திர போஸ் (ஈ) பாரதியார்
5. பின்வருவனவற்றைபொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
   (அ) பால கங்காதர திலகர் – 1. இந்தியாவின் குரல்
   (ஆ) தாதாபாய் நௌரோஜி – 2. மெட்ராஸ் டைம்ஸ்
   இ) மெக்காலே – 3. கேசரி
   (ஈ) வில்லியம் டிக்பை – 4. இந்தியக் கல்வி குறித்த குறிப்புகள்
   அ) 2413 **ஆ) 3142** இ) 1324 ஈ) 4231
6. பின்வரும் எது ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
   (அ) ஆங்கிலக் கல்விச் சட்டம் – 1843 (ஆ) அடிமை முறை ஒழிப்பு – 1859
   **(இ) சென்னைவாசிகள் சங்கம் – 1852** (ஈ) இண்டிகோ கலகம் – 1835
7. பின்வரும் அமைப்புகள் தொடங்கப்பட்ட சரியான காலவரிசையைத் தேர்வு செய்க
   (i) கிழக்கிந்தியக் கழகம் (ii) சென்னை மகாஜன சங்கம்
   (iii) சென்னைவாசிகள் சங்கம் (iv) இந்தியச் சங்கம்
   (அ) ii, i, iii, iv (ஆ) ii, iii, i, iv **(இ) iii, iv, i, ii** (ஈ) iii, iv, ii, i
8. இந்திய தேசிய காங்கிரஸை நிறுவியவர்
   (அ) சுபாஷ்சந்திர போஸ் (ஆ) காந்தியடிகள் **(இ) A.O.ஹியூம்** (ஈ) பாலகங்காதர திலகர்
9. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர்
   (அ) சுரேந்திரநாத் பானர்ஜி (ஆ) பத்ருதீன் தியாப்ஜி (இ) A.O.ஹியூம் **(ஈ) W.C. பானர்ஜி**
10. "இந்தியாவின் முதுபெரும் மனிதர்" எனஅழைக்கப்படுபவர்
   (அ) பாலகங்காதர திலகர் (ஆ) M. K. காந்தி **(இ) தாதாபாய் நௌரோஜி** (ஈ) சுபாஷ்சந்திர போஸ்
11. "இந்தியாவில் "வறுமையும் பிரிட்டனுக்கொவ்வாத இந்திய ஆட்சியும்" (Poverty and Un–British Rule in India) என்ற நூலை எழுதியவர்
   (அ) பாலகங்காதர திலகர் (ஆ) கோபாலகிருஷ்ண கோகலே **(இ) தாதாபாய் நௌரோஜி**
   (ஈ). எம்.ஜி. ரானடே
12. கூற்று: ஆங்கில அரசாங்கம் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றியது.
   காரணம்: இங்கிலாந்தின் தடையற்ற வணிகக் கொள்கையினால் இந்தியா நன்மையைப் பெற்றது.
   (அ) கூற்று சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை
   (ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது
   **(இ) கூற்று சரி; காரணம் தவறு**
   (ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு
13. ஒரிசா பஞ்சம் குறித்த பின்வரும் கூற்றுக்களில் சரியானவை எவை/எது?
   கூற்று 1: 1866ஆம் ஆண்டில் ஒன்றரை மில்லியன் மக்கள் ஒரிசாவில் பட்டினியால் இறந்தனர். கூற்று 2: பஞ்ச காலத்தில் 200 மில்லியன் பவுண்ட் அரிசியை பிரிட்டனுக்கு ஆங்கில அரசு ஏற்றுமதி செய்தது. கூற்று 3: ஒரிசா பஞ்சமானது தாதாபாய் நௌரோஜியை இந்திய வறுமை குறித்து வாழ்நாள்
   (அ) 1,2 (ஆ) 1, 3 (இ) இவற்றுள் எதுவுமில்லை **(ஈ) இவை அனைத்தும்**

## பாடம் – 2

1. சூரத்தில் நடைபெறவிருந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு காங்கிரஸின் அடுத்த தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு யாருடைய பெயர் தீவிர தேசியவாதிகளால் முன்மொழியப்பட்டது?
(அ) அரவிந்த கோஷ் (ஆ) தாதாபாய் நௌரோஜி (இ) ஃபெரோஸ்ஷாமேத்தா **(ஈ) லாலா லஜபதி ராய்**

2. பின்வரும் மேற்கண்ட கூற்றுக்களில் எது/எவை சரியானவை.
(i) 1905 இல் மேற்கொள்ளப்பட்ட வங்கப் பிரிவினை ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கைக்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.
(ii) 1905இல் நடைபெற்ற கல்கத்தா மாநாட்டில் சுரேந்திரநாத் பானர்ஜி பிரிட்டிஷ் பொருட்களையும் நிறுவனங்களையும் புறக்கணிக்க அழைப்பு விடுத்தார்.
(iii) 1905 ஆகஸ்ட்7, ல் கல்கத்தா நகர அரங்கில் (Town Hall) நடைபெற்றகூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்த முறையான அறிவிப்பு வழங்கப்பட்டது.
(அ) (i) மட்டும் (ஆ) (i) மற்றும் (iii) மட்டும் (இ) (i) மற்றும் (ii) மட்டும் **(ஈ) மேற்கண்ட அனைத்தும்**

3. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்க.

| | |
|---|---|
| (அ) இந்தியப் பத்திரிகைச் சட்டம், 1910 | – 1. சுய ஆட்சி |
| (ஆ) விடிவெள்ளிக் கழகம் | – 2. சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி |
| (இ) சுயராஜ்யம் | –3. தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது |
| (ஈ) சுதேசி | –4. கல்விக்கான தேசியக் கழகம் |

(அ) 3 1 4 2 (ஆ) 1 2 3 4 **(இ) 3 4 1 2** (ஈ) 2 3 4 1

4. பின்வருவனவற்றுள் எந்த ஒன்று சரியாகப் பொருந்தியுள்ளது?
**(அ) பங்கிம் சந்திர சாட்டர்ஜி – ஆனந்தமடம்** (ஆ) G.சுப்ரமணியம் – விடிவெள்ளிக் கழகம்
(இ) மிண்டோபிரபு – பல்கலைக்கழகச் சட்டம், 1904 (ஈ) தீவிர தேசியவாத மையம்

5. கல்கத்தாவில் அனுசிலன் சமிதியை நிறுவியவர்
(அ) புலின் பிஹாரி தாஸ் (ஆ) ஹேமசந்திர கானுங்கோ
**(இ) ஜதிந்தரநாத் பானர்ஜி மற்றும் பரிந்தர்குமார் கோஷ்**
(ஈ) குதிரம் போஷ் மற்றும் பிரஃபுல்லாசாக்கி

6. கூற்று: 1905 அக்டோபர் 16 துக்க நாளாக அனுசரிக்கப்பட்டது.
காரணம்: மேற்படி நாளில் வங்காளம் முறைப்படி இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது.
**(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

7. கூற்று: வ. உ. சிதம்பரம் சுதேசி கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
காரணம்: இந்தியக் கடற்கரைகளில் ஆங்கிலேயர்களின் முற்றுரிமையினை அவர் எதிர்த்தார்.
**(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால், காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி; காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு; காரணம் சரி.

8. சுப்ரமணிய பாரதி குறித்த பின்வரும் எந்த கூற்று தவறானது?
(அ) பாரதி சுதேசமித்திரன் இதழின் துணை ஆசிரியராக இருந்தார்.
(ஆ) பாரதி திலகரின் Tenets of New Party என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தார்.
**(இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார்.**
(ஈ) பாரதி பெண்களுக்கான "சக்ரவர்த்தினி" என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.

## பாடம் – 3

1. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?

(அ) திலகர் **(ஆ) அன்னிபெசண்ட்** (இ) பி.பி. வாடியா (ஈ) எச்.எஸ். ஆல்காட்

2. பின்வருவனவற்றுள் அன்னிபெசண்ட் பற்றிய சரியான கூற்று எது?
   1. கர்னல் எச்.எஸ். ஆல்காட்டிற்குப் பிறகு பிரம்மஞான சபையின் உலகளாவிய தலைவராக அன்னிபெசண்ட் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
   2. 1914 இல் அவர் காமன்வீல் என்ற வாராந்திரியை தொடங்கினார்.
   3. 1915 ஆம் ஆண்டு "How India wrought for Freedom" என்ற தலைப்பிலான புத்தகத்தைப் பதிப்பித்தார்.

(அ) 1 மற்றும் 2 (ஆ) 2 மற்றும் 3 (இ) 1 மற்றும் 3 **(ஈ) 1, 2 மற்றும் 3**

3. கூற்று: ஜின்னாவை "இந்து–முஸ்லீம் ஒற்றுமையின் தூதர்" என்று சரோஜினி அம்மையார் அழைத்தார்.

காரணம்: லக்னோ ஒப்பந்தத்தின் தலைமைச் சிற்பி ஜின்னா ஆவார்.

(அ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கமல்ல.

**(ஆ) கூற்று சரி. காரணம் கூற்றிற்கான விளக்கம்.**

(இ) கூற்று தவறு. காரணம் சரி

(ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

4. பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் யாரால் நிறுவப்பட்டது?

(அ) மகாத்மா காந்தியடிகள் **(ஆ) மதன்மோகன் மாளவியா** (இ) திலகர் (ஈ) பி.பி. வாடியா

5. 1916ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம்

(அ) முஸ்லீம் லீக் எழுச்சி.

(ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைப்பு.

**(இ) முஸ்லீம் லீக்கின் தனித்தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.**

(ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு.

6. பின்வருவனவற்றைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகள் உதவியுடன் பொருத்துக.

(அ) கதார் கட்சி – i. 1916

(ஆ) நியூ இந்தியா – ii. 1913

(இ) தன்னாட்சி இயக்கம் – iii. 1909

(ஈ) மிண்டோ–மார்லி சீர்திருத்தம் – iv. 1915

**அ) ii, iv, i, iii** (ஆ) iv, i, ii, iii (இ) i, iv, iii, ii (ஈ) ii, iii, iv, i

7. "Indian Unrest" என்ற புத்தகத்தின் ஆசிரியர்

(அ) லாலா லஜபதிராய் **(ஆ) வேலண்டைன் சிரோலி** (இ) திலகர் (ஈ) அன்னிபெசண்ட்

8. கதார் கட்சி யாரால் நிறுவப்பட்டது?

(அ) லாலா லஜபதி ராய் (ஆ) ஏ.சி. மஜும்தார் **(இ) லாலா ஹர்தயாள்** (ஈ) சங்கர்லால் பாங்கர்

9. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் முதல் தலைவர் யார்?

(அ) பி.பி. வாடியா (ஆ) ஜவஹர்லால் நேரு

**(இ) லாலா லஜபதி ராய்** (ஈ) சி.ஆர். தாஸ்

## பாடம் – 4

1. காந்தியடிகளின் அரசியல் குரு யார்?

(அ) திலகர் **(ஆ) கோகலே** (இ) w.c. பானர்ஜி (ஈ) M.G. ரானடே

2. தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பிய காந்தியடிகள் தனது வெற்றிகரமான முதலாவது சத்தியாகிரகப் போராட்டத்தைத் தொடங்கிய இடம்

(அ) கேதா (ஆ) தண்டி **(இ) சம்பரான்** (ஈ) பர்தோலி

3. சைமன் கமிஷன் காங்கிரஸால் ஏன் புறக்கணிக்கப்பட்டது?

(அ) குழு அறிக்கையில் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்குவது குறித்த பரிந்துரை இல்லை.

(ஆ) சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கவில்லை.

**(இ) அக்குழுவில் இந்தியர்கள் இடம்பெறவில்லை.**

(ஈ) அது முழுச் சுதந்திரத்திற்கான வாக்குறுதியைக் கொண்டிருக்கவில்லை.

4. இந்தியாவின் மூவர்ணக் கொடி எப்போது ஏற்றப்பட்டது?
   **(அ) டிசம்பர் 31, 1929** (ஆ) மார்ச் 12, 1930 (இ) ஜனவரி 26, 1930 (ஈ) ஜனவரி 26, 1931
5. 1923 இல் மோதிலால் நேரு மற்றும் சி.ஆர். தாஸ் ஆல் தோற்றுவிக்கப்பட்ட கட்சியின் பெயர் என்ன?
   **(அ) சுயராஜ்ய கட்சி** (ஆ) கதார் கட்சி (இ) சுதந்திரா கட்சி ஈ) கம்யூனிஸ்ட் கட்சி
6. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
   (அ) நாம சூத்ரா இயக்கம் – 1. வட மேற்கு இந்தியா
   (ஆ) ஆதிதர்ம இயக்கம் – 2. தென்னிந்தியா
   (இ) சத்யசோதக் இயக்கம் – 3. கிழக்கிந்தியா
   (ஈ) திராவிட இயக்கம் – 4. மேற்கு இந்தியா
   **(அ) 3 1 4 2** (ஆ) 2 1 4 3 (இ) 1 2 3 4 (ஈ) 3 4 1 2
7. ஒத்துழையாமை இயக்கத்தின் பல்வேறு நிலைகளைக் காலவரிசைப்படுத்துக.
(1) அமிர்தசரஸ் நகரில் பிரிட்டிஷ் படையால் ஆயுதம் ஏந்தாத மக்கள் மீது கொடிய தாக்குதல் நடத்தப்பட்டது.
(2)நீதிமன்ற விசாரணை இன்றி எவரையும் சிறையில் அடைக்க ரௌலட் சட்டம் கொண்டு வரப்பட்டது.
(3)சௌரி சௌரா வன்முறைச் சம்பவம் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக் கொள்ள வழி வகுத்தது.
(4)கல்கத்தாவில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழையாமை என்ற காந்தியடிகளின் முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.
   **(அ) 2, 1, 4, 3** (ஆ) 1, 3, 2, 4 (இ) 2, 4, 1, 3 (ஈ) 3, 2, 4,1
8. பின்வரும் எந்த ஒன்று சரியாகப் பொருந்தவில்லை?
   **(அ) பஞ்சாப் துணைஆளுநர் – 1. ரெஜினால்டு டையர்**
   (ஆ) தலித் – பகுஜன் இயக்கம் – 2. டாக்டர். அம்பேத்கர்
   (இ) சுயமரியாதை இயக்கம் – 3. ஈ.வெ.ரா. பெரியார்
   (ஈ) சத்தியாகிரக சபை – 4. ரௌலட்சட்டம்
9. பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி அமைத்து கொடுக்கப்பட்டுள்ள விடைகளிலிருந்து சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்
   (i) கேதா சத்தியாகிரகம் (ii) சம்பரான் இயக்கம்
   (iii) பிராமணரல்லாதார் இயக்கம் (iv) வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம்
   (அ) ii, iii, i, iv **(ஆ) iii, ii, i, iv** (இ) ii, i, iv, iii (ஈ) ii, i, iii, iv
10. பின்வருவனவற்றுள் எது/எவை சரியானவை அல்ல.
   (i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார்.
   (ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்.
   (iii) சைமன் குழுவினை முஸ்லீம் லீக் வரவேற்றது.
   (iv) இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் காந்தியடிகள் கலந்து கொண்டார்.
   (அ) i (ஆ) i மற்றும் iv (இ) ii மற்றும் iii **(ஈ) iii மட்டும்**
11. ஒத்துழையாமை இயக்கம் உள்ளடக்கியவை.
   (அ) பள்ளி மற்றும் கல்லூரிகளைப் புறக்கணித்தல்
   (ஆ) அரசு வழங்கிய பட்டங்களைத் திருப்பியளித்தல்
   (இ) உண்ணாவிரதங்கள் கடைப்பிடிப்பதை எதிர்த்தல்
   (ஈ) அரசுக்கு எதிரான சதி வேலைகளில் ஈடுபடுதல்
   **(அ) அ மற்றும் ஆ** (ஆ) ஆ மற்றும் இ (இ) அ மற்றும் ஈ (ஈ) இ மற்றும் ஈ
12. கூற்று: பி.ஆர். அம்பேத்கர் மஹத் சத்தியாகிரகத்தைத் தொடங்கினார்.
   காரணம்: அவர் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களை ஒருங்கிணைக்க முயன்றார்.
   அ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
   (ஆ) கூற்று சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
   **(இ) கூற்று சரி, காரணம் தவறு.**
   (ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

13. கூற்று: 1919 இல் இந்தியக் கவுன்சில் சட்டம் மற்றும் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
காரணம்: இது மிதவாத தேசியவாதிகளை அரவணைத்து தீவிர தேசியவாதிகளைத் தனிமைப்படுத்தும் பிரிட்டிஷாரின் கொள்கையின் ஒரு பகுதியாகும்.
**(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி, காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு, காரணம்சரி.

14. கீழே குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களில் சுயராஜ்ய கட்சியுடன் தொடர்பில்லாத தலைவர் யார்?
**(அ) இராஜாஜி** (ஆ) சித்தரஞ்சன் தாஸ் (இ) மோதிலால் நேரு (ஈ) சத்யமூர்த்தி

15. காந்தியடிகளின் தண்டி யாத்திரை பயணம் சென்றடைந்த ஆண்டு
**(அ) ஏப்ரல் 6, 1930** (ஆ) மார்ச் 6, 1930 (இ) ஏப்ரல் 4, 1939 (ஈ) மார்ச் 4, 1930

## பாடம் – 5

1. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
(அ) 1920 **(ஆ) 1925** (இ) 1930 (ஈ) 1935

2. கல்பனா தத் எதனுடன் தொடர்புடையவர்?
(அ) ஹிந்துஸ்தான் சோசலிஸ்ட்ரிபப்ளிகன் அசோசியேஷன் (ஆ) வங்காள சபை
**(இ) இந்தியக் குடியரசு இராணுவம்** (ஈ) இவற்றில் எதுவுமில்லை

3. பின்வருவனவற்றைப் பொருத்துக
(அ) கான்பூர் சதி வழக்கு –1. அடிப்படை உரிமைகள்
(ஆ) மீரட்சதி வழக்கு –2. சூரியா சென்
(இ) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு கொள்ளை –3. 1929
(ஈ) இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாடு –4. 1924
(அ) 1, 2, 3, 4 (ஆ) 2, 3, 4, 1 (இ) 3, 4, 1, 2 **(ஈ) 4, 3, 2 1**

4. கீழ்க்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் உயிரிழந்தவர் யார்? (
அ) புலின் தாஸ் (ஆ) சச்சின் சன்யால் **(இ) ஜதீந்திரநாத் தாஸ்** (ஈ) பிரித்தி வதேதார்

5. பின்வரும் கூற்றுகளில் பொருளாதாரப் பெரும் மந்தம் குறித்துச் சரியானவை.
(i) இது வடஅமெரிக்காவில் ஏற்பட்டது.
(ii) வால் தெருவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது பெரும் மந்தத்தை விரைவுபடுத்தியது.
(iii) பெரும் மந்தம் வசதி படைத்தவர்களை மட்டுமே பாதித்தது.
(iv) விலை வீழ்ச்சி அடைந்ததால் பெரும் மந்தத்தின் போது சிறப்பான வாழ்க்கை முறையை தொழிலாளர்கள் அனுபவித்தனர்.
**(அ) i மற்றும் ii** (ஆ) i, ii, மற்றும் iii (இ) i மற்றும் iv (ஈ) i, iii மற்றும் iv

6. முதலாவது பருத்தித் தொழிற்சாலை பம்பாயில் தொடங்கப்பட்ட ஆண்டு
(அ) 1852 **(ஆ) 1854** (இ) 1861 (ஈ) 1865

7. கொடுக்கப்பட்ட குறிப்புகளை கொண்டு சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(i) "Chittagong Armoury Raiders Reminiscences" எனும் நூல் கல்பனா தத் என்பவரால் எழுதப்பட்டது.
(ii) கல்பனா தத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்.
(iii) கல்பனா தத் பேரரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார்.
(அ) i மட்டும் (ஆ) i மற்றும் ii (இ) i மற்றும் iii **(ஈ) அனைத்தும்**

8. முதலாவது பயணிகள் இரயில் 1853 இல் எந்த இடங்களுக்கு இடையே ஓடியது?
(அ) மதராஸ் – அரக்கோணம் (ஆ) பம்பாய் – பூனா
**(இ) பம்பாய் – தானே** (ஈ) கொல்கத்தா – ஹூக்ளி

9. கல்கத்தாவில் முதலாவது சணல் ஆலை தொடங்கப்பட்ட ஆண்டு
 **(அ) 1855** (ஆ) 1866 (இ) 1877 (ஈ) 1888
10. பின்வருவோரில் கான்பூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்டவர் யார்?
 (அ) எம்.என். ராய் (ஆ) பகத் சிங் **(இ) எஸ்.ஏ. டாங்கே** (ஈ) ராம் பிரசாத் பிஸ்மில்
11. கான்பூர் சதி வழக்குக் குறித்த பின்வரும் எந்த கூற்றுகள் சரியானவை?
 (i) சணல் மற்றும் பருத்தி தொழிற்சாலைகளில் தொழிற்சங்கங்கள் தோன்றின.
 (ii) இவ்வழக்கில் கம்யூனிஸ்ட்களும் தொழிற்சங்கவாதிகளும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.
 (iii) இவ்வழக்கு நீதிபதி H . E . ஹோம்ஸ் என்பவரின் முன்பாக விசாரணைக்கு வந்தது.
 (iv) விசாரணை மற்றும் சிறைத் தண்டனையானது இந்தியாவில் காங்கிரஸ் நடவடிக்கைகளில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
 **(அ) i, ii மற்றும் iii** (ஆ) i, iii மற்றும் iv (இ) ii, iii மற்றும் iv (ஈ) i, ii மற்றும் iv

## பாடம் 6

1. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
 (அ) உருது (ஆ) இந்தி (இ) மராத்தி **(ஈ) பாரசீகம்**
2. லண்டன் பிரிவிக் கவுன்சிலில் இடம்பெற்ற முதல் இந்தியர்
 (அ) ரஹமத்துல்லா சயானி (ஆ) சர் சையது அகமது கான்
 **(இ) சையது அமீர் அலி** (ஈ) பஃருதீன் தயாப்ஜி
3. கூற்று: 1870 இல் வங்காள அரசாங்க ஆணை இஸ்லாமிய தொழில் வல்லுநர் குழுக்களிடையே ஐயங்களை ஏற்படுத்தியது.
 காரணம்: அவ்வாணை உருது மொழி பாரசீக – அரபி எழுத்து முறைக்குப் பதிலாக இந்தியைக் கொண்டு வந்தது.
 அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
 **(ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.**
 (இ) கூற்று தவறு காரணம் சரி.
 (ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.
4. இரு நாடு கொள்கையை முதன் முதலில் கொண்டு வந்தவர்.
 (அ) இராஜாஜி (ஆ) ராம்சே மெக்டொனால்டு (இ) முகமது இக்பால் **ஈ) சர் வாசிர் ஹசன்**
5. 1937 இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது
 (அ) 12 மாகாணங்கள் **(ஆ) 7 மாகாணங்கள்** (இ) 5 மாகாணங்கள் ஈ) 8 மாகாணங்கள்
6. காங்கிரஸ் ஆட்சி முடிவுக்கு வந்த நாளினை முஸ்லிம் லீக் மீட்பு நாளாக கொண்டாடியது
 (அ) 22 டிசம்பர், 1940 (ஆ) 5 பிப்ரவரி, 1939 (இ) 23 மார்ச், 1937 **(ஈ) 22 டிசம்பர், 1939**
7. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
 (அ) அன்னிபெசண்ட் – 1. அலிகார்இயக்கம்
 (ஆ) சர் சையது அகமது கான் – 2. தயானந்த சரஸ்வதி
 (இ) கிலாபத் இயக்கம் – 3. பிரம்ம ஞான சபை
 (ஈ) சுத்தி இயக்கம் – 4. அலி சகோதரர்கள்
 **(அ) 3 1 4 2** (ஆ) 1 2 3 4 (இ) 3 4 1 2 (ஈ) 1 2 4 3
8. பின்வரும் கூற்றுகளிலிருந்து சரியானவற்றைத் தேர்வு செய்க.
 (i) அலிகார் இயக்கத்தைத் தோற்றுவித்த சர் சையது அகமது கான் தொடக்கத்தில் காங்கிரசை ஆதரித்தார்.
 (ii) 1909 இல் தோற்றுவிக்கப்பட்ட பஞ்சாப் இந்து சபையானது இந்து மத வகுப்புவாத அரசியலுக்கு அடித்தளமிட்டது.
 **(அ) கூற்று (i) மற்றும் (ii) சரி** (ஆ) கூற்று (i) சரி (ii) தவறு
 (இ) கூற்று (i) தவறு (ii) சரி (ஈ) கூற்று (i) மற்றும் (ii) தவறு
9. எப்போது முஸ்லிம் லீக் நேரடி நடவடிக்கை நாளை அனுசரித்தது?
 (அ) 25 டிசம்பர், 1942 **(ஆ) 16 ஆகஸ்ட், 1946** (இ) 21 மார்ச், 1937 (ஈ) 22 டிசம்பர், 1939

10. வேவல் பிரபுவிற்குப் பின்னர் பதவியேற்றவர்
(அ) லின்லித்கோ (ஆ) பெதிக்லாரன்ஸ் **(இ) மௌண்ட்பேட்டன்** (ஈ) செம்ஸ்ஃபோர்டு

11. கூற்று: பிரிட்டிஷ் அரசாங்கம் வகுப்பு வாதத்தை வளர்க்கவும் பரப்பவும் பின்பற்றியது தனித்தொகுதிக் கொள்கையாகும்

காரணம்: மக்கள் இரண்டு தனித்தொகுதிகளாக பிரிக்கப்பட்டதால் வகுப்புவத அடிப்படையிலேயே வாக்களித்தனர்.

அ) கூற்று சரி, ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை. (ஆ) கூற்று சரி, காரணம் தவறு.
(இ) கூற்று மற்றும் காரணம் தவறு. **(ஈ) கூற்று சரி, காரணம் கூற்றை விளக்குகிறது**.

12. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | | |
|---|---|---|
| அ) இந்துமத மறுமலர்ச்சி | – | 1. M.S. கோல்வாக்கர் |
| ஆ) கலீஃபாபதவி ஒழிப்பு | – | 2. ஆரிய சமாஜம் |
| இ) லாலாலஜபதி ராய் | – | 3.1924 |
| ஈ) ராஷ்டிரிய சுயசேவா சங்கம் | – | 4.இந்து– முஸ்லிம் மாகாணங்களாக பஞ்சாப் பிரித்தல் |

(அ) 2 4 3 1 (ஆ) 3 4 1 2 (இ) 1 3 2 4 **(ஈ) 2 3 4 1**

**பாடம் – 7**

1. தனிநபர் சத்தியாகிரகம் எப்போது தொடங்கியது?
(அ) மார்ச் 23, 1940 (ஆ) ஆகஸ்ட் 8, 1940 **(இ) அக்டோபர் 17, 1940** (ஈ) ஆகஸ்ட் 9, 1942

2. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

| | |
|---|---|
| (அ) இந்து–முஸ்லீம் கலவரம் | – 1. மோகன் சிங் |
| (ஆ) ஆகஸ்ட் கொடை | – 2. கோவிந்த் பல்லப் பந்த் |
| (இ) பிரிவினைத் தீர்மானத்தைமுன்மொழிந்தவர் | – 3. லின்லித்கோ பிரபு |
| (ஈ) இந்திய தேசிய இராணுவம் | – 4. நவகாளி |

(அ) 3 4 2 1 (ஆ) 4 2 1 3 **(இ) 4 3 2 1** (ஈ) 3 2 4 1

3. கிரிப்ஸ் தூதுக்குழு யாருடைய ஆட்சியின் போது இந்தியாவிற்கு வருகை தந்தது?
(அ) வேவல் பிரபு **ஆ) லின்லித்கோ பிரபு**
இ) மௌண்ட்பேட்டன் பிரபு ஈ) இவர்களில் யாருமில்லை

4. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.

| | |
|---|---|
| (அ) அமெரிக்கக் குடியரசுத் தலைவர் | – 1. டோஜா |
| (ஆ) சீனக் குடியரசுத் தலைவர் | – 2. வின்ஸ்டன் சர்ச்சில் |
| (இ) பிரிட்டிஷ் பிரதமர் | – 3. ஷியாங் கே ஷேக் |
| (ஈ) ஜப்பான் பிரதமர் | – 4. எஃப்.டி. ரூஸ்வெல்ட் |

(அ) 1 4 3 2 (ஆ) 1 3 2 4 **(இ) 4 3 2 1** (ஈ) 4 2 3 1

5. சுபாஷ் சந்திர போஸ் எந்த ஆண்டு காங்கிரஸிலிருந்து நீக்கப்பட்டார்?
(அ) 1938 **(ஆ) 1939** (இ) 1940 (ஈ) 1942

6. மகாத்மா காந்தியடிகளின் "செய் அல்லது செத்துமடி" என எந்த நிகழ்வின் போது அழைப்பு விடுத்தார்?
(அ) சட்டமறுப்பு இயக்கம் (ஆ) ஒத்துழையாமை இயக்கம்
**(இ) வெள்ளையனே வெளியேறு இயக்கம்** (ஈ) இவை அனைத்தும்

7. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது பம்பாயில் இரகசிய வானொலி நிலையத்தை நடத்தியவர் யார்?
**(அ) உஷா மேத்தா** (ஆ) பிரீத்தி வதேதார் இ) ஆசப் அலி (ஈ) கேப்டன் லட்சுமி

8. இந்திய தேசிய இராணுவப் படைவீரர்கள் சார்பாக நீதிமன்றத்தில் வாதாடியவர் யார்?
**(அ) ஜவஹர்லால் நேரு** (ஆ) மோதிலால் நேரு (இ) இராஜாஜி (ஈ) சுபாஷ் சந்திர போஸ்

9. 1942 இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்ட போது இந்தியாவின் அரசபிரதிநிதி யார்?
(அ) வேவல் பிரபு **(ஆ) லின்லித்கோ பிரபு** (இ) மௌண்ட்பேட்டன் பிரபு (ஈ) வின்ஸ்டன் சர்ச்சில்

10. கூற்று: வெள்ளையனே வெளியேறு இயக்கம் அதன் குறிக்கோளை அடையவில்லை.
    காரணம்: அப்போதைய பிரிட்டிஷ் அரசு கடுமையான அடக்கு முறையைப் பின்பற்றியது.
    **(அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது**
    (ஆ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்கவில்லை.
    (இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
    (ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.
11. இந்திய தேசிய இராணுவம் எந்த நாட்டு உதவியுடன் நிறுவப்பட்டது?
    (அ) ஜெர்மனி **(ஆ) ஜப்பான்** (இ) பிரான்ஸ் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
12. இந்திய தேசிய இராணுவத்தின் பெண்கள் படைப்பிரிவின் பெயர்
    (அ) சுபாஷ் படைப்பிரிவு (ஆ) கஸ்தூர்பா படைப்பிரிவு
    (இ) கேப்டன் லட்சுமி படைப்பிரிவு **(ஈ) ஜான்ஸி ராணி படைப்பிரிவு**
13. சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசாங்கத்தைச் சுபாஷ் சந்திர போஸ் எங்கு ஏற்படுத்தினார்?
    (அ) இரங்கூன் (ஆ) மலேயா (இ) இம்பால் **(ஈ) சிங்கப்பூர்**
14. இந்திய தேசிய இராணுவப் படை மீதான விசாரணை எங்கு நடைபெற்றது?
    **(அ) செங்கோட்டை, புதுடெல்லி** (ஆ) பினாங்
    (இ) வைஸ் ரீகல் லாட்ஜ், சிம்லா (ஈ) சிங்கப்பூர்
15. 1945 இல் சிம்லா மாநாட்டைக் கூட்டிய அரசபிரதிநிதி
    **(அ) வேவல் பிரபு** (ஆ) லின்லித்கோ பிரபு (இ) மௌண்ட்பேட்டன் பிரபு (ஈ) கிளமண்ட் அட்லி
16. 1946 இல் இடைக்கால அரசாங்கம் யாருடைய தலைமையில் அமைக்கப்பட்டது?
    **(அ) ஜவஹர்லால் நேரு** (ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்
    (இ) ராஜேந்திர பிரசாத் (ஈ) வல்லபாய் படேல்
17. சரியான வரிசையில் அமைத்து விடையைத் தேர்வு செய்க.
    (i) இந்திய தேசிய இராணுவம் தோற்றுவிக்கப்படுதல் (ii) இராயல் இந்திய கடற்படைக்கலகம்
    (iii) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை (iv) இராஜாஜி திட்டம்
    (அ) ii, i, iii, iv **(ஆ) i, iv, iii, ii** (இ) iii, iv, I, ii (ஈ) iii, iv, ii, i
18. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்வு செய்க.
    (i) இந்திய தேசிய இராணுவம் மீதான விசாரணை (ii) நேரடி நடவடிக்கைநாள்
    (iii) ஆகஸ்ட் கொடை (iv) தனிநபர் சத்தியாகிரகம்
    (அ) i, ii, iii, iv (ஆ) iii, i, ii, iv **(இ) iii, iv, i, ii** (ஈ) i, iii, iv, ii
19. இந்தியர் கைகளுக்கு அதிகாரம் மாற்றப்படும் என அறிவித்த பிரிட்டிஷ் பிரதமர் யார்?
    (அ) வின்ஸ்டன் சர்ச்சில் (ஆ) மௌண்ட்பேட்டன் பிரபு
    **(இ) கிளமண்ட் அட்லி** (ஈ) F. D. ரூஸ்வெல்ட்
20. பிரிட்டிஷார் எந்தக் காலத்திற்குள் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்தனர்?
    (அ) ஆகஸ்ட் 15, 1947 (ஆ) ஜனவரி 26, 1950 **(இ) ஜூன், 1948** (ஈ) டிசம்பர், 1949

**பாடம் 8**

1. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க
    (அ) ஜே.வி.பி. குழு – 1. 1928
    (ஆ) சிரில் ராட்கிளிஃப் – 2. மாநில மறுசீரமைப்பு ஆணையம்
    (இ) பசல் அலி – 3. 1948
    (ஈ) நேரு குழு அறிக்கை – 4. எல்லை வரையறை ஆணையம்
    (அ) 1 2 3 4 **(ஆ) 3 4 2 1** (இ) 4 3 2 1 (ஈ) 4 2 3 1
2. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படி அமைக்கவும்.
    (i) இந்திய சுதந்திரம் குறித்த அட்லியின் அறிவிப்பு
    (ii) நேருவின் தலைமையிலான இடைக்கால அரசாங்கம்
    (iii) மௌண்ட்பேட்டன் திட்டம்
    **(அ) ii, i, iii** (ஆ) i, ii, iii (இ) iii, ii, | (ஈ) ii, iii, i

3. பின்வருவனவற்றைப் பொருத்திச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) சீன மக்கள் குடியரசு – 1. பெல்கிரேடு

(ஆ) பாண்டுங் மாநாடு – 2. மார்ச் 1947

(இ) ஆசிய உறவுகள் மாநாடு – 3. ஏப்ரல் 1955

(ஈ) அணிசேரா இயக்கத்தின் தோற்றம் – 4. ஜனவரி 1, 1950

அ) 3 4 2 1 (ஆ) 4 2 3 1 **(இ) 4 3 2 1** (ஈ) 3 2 4 1

4. பின்வரும் நிகழ்வுகளின் சரியான வரிசையைத் தேர்க

(i) சீனமக்கள் குடியரசு (ii) சீனாவுடனான இந்தியப் போர்

(iii) அரசமைப்பு நிர்ணயச் சபையின் கூட்டம் (iv) பஞ்சசீலக் கொள்கை

(v) நேரு–லியாகத் அலிகான் ஒப்பந்தம்

(அ) i, ii, iii, iv, v **(ஆ) iii, i , v, iv, ii** (இ) iii, iv, i, v, ii (ஈ) i, iii, iv, v, ii

5. மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்பட்ட நாள்

**(அ) ஜனவரி 30, 1948** (ஆ) ஆகஸ்ட் 15, 1947 (இ) ஜனவரி 30, 1949 (ஈ) அக்டோபர்2, 1948

6. ஆந்திர மாநில கோரிக்கையினை முதன்முதலில் எழுப்பியவர்.

(அ) பொட்டி ஸ்ரீராமுலு **(ஆ) பட்டாபி சீத்தாராமையா** (இ) கே.எம். பணிக்கர் (ஈ) டி. பிரகாசம்

7. அரசமைப்பு நிர்ணயச் சபையில் குறிக்கோள் தீர்மானங்களைக் கொண்டு வந்தவர்

(அ) இராஜேந்திர பிரசாத் **(ஆ) ஜவகர்லால் நேரு**

(இ) வல்லபாய் படேல் (ஈ) மௌலானா அபுல்கலாம் ஆசாத்

8. பி.ஆர். அம்பேத்காரை எந்த தொகுதியிலிருந்து தேர்ந்தெடுப்பதைக் காங்கிரஸ் உறுதி செய்தது?

(அ) அமேதி **(ஆ) பம்பாய்** இ) நாக்பூர் (ஈ) மகவ்

9. கூற்று: ராட்கிளிஃபின் எல்லை வரையறை அனைத்து வகையான முரண்பாடுகளையும் கொண்டிருந்தது.

காரணம்: முரண்பாடுகள் இருப்பினும் அது அனைவராலும் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி.

10.அரசமைப்பு நிர்ணய சபையின் முதல் கூட்டம் எப்போது நடைபெற்றது?

(அ) மார்ச் 22, 1949 (ஆ) ஜனவரி 26, 1946 **(இ) டிசம்பர் 9, 1946** (ஈ) டிசம்பர்13, 1946

11.அரசமைப்பு எப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது?

(அ) ஜனவரி 30, 1949 (ஆ) ஆகஸ்ட் 15, 1947 (இ) ஜனவரி 30, 1949 **(ஈ) நவம்பர் 26, 1949**

12 மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட்ட முதல் மாநிலம்

(அ) காஷ்மீர் (ஆ) அஸ்ஸாம் **(இ) ஆந்திரா** (ஈ) ஒரிஸா

**பாடம் – 9**

1. பின்வருவனவற்றை காலவரிசைப் படுத்துக .

(i) ஜமீன்தாரி முறை ஒழிப்புச் சட்டங்கள்

(ii) அதிக விளைச்சலைத் தரும் வீரிய ரக விதைகளின் பயன்பாடு

(iii) தமிழ்நாட்டின் முதல் நில உச்சவரம்புச் சட்டம்

(அ) ii, i, iii **(ஆ) i, iii, ii** (இ) iii, ii, I (ஈ) ii, iii, i

2. இந்திய அரசாங்கம் .............. வகையான மேம்பாட்டிற்காக உறுதி பூண்டுள்ளது.

(அ) முதலாளித்துவ **(ஆ) சமதர்ம** (இ) தெய்வீக (ஈ) தொழிற்சாலை

3. இந்திய அரசியலமைப்பில் முதலாவது திருத்தம் எப்போது மேற்கொள்ளப்பட்டது?

**(அ) 1951** (ஆ) 1952 (இ) 1976 (ஈ) 1978

4. கொடுக்கப்பட்டுள்ள விடைக் குறிப்புகளைக் கொண்டு பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
   (அ) தொழில் மேம்பாடு கொள்கைத் தீர்மானம் – 1. 1951–56
   (ஆ) இந்திய அறிவியல் நிறுவனம் – 2. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம்
   (இ) மகலனோபிஸ் – 3. 1909
   (ஈ) முதலாவது ஐந்தாண்டு திட்டம் – 4. 1956
   (அ) 1 2 3 4 (ஆ) 3 1 4 2 **(இ) 4 3 2 1** (ஈ) 4 2 3 1

5. நில சீர்த்திருத்தச் சட்டம் தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக எப்போது நடைமுறைப் படுத்தப்பட்டது?
   (அ) 1961 **(ஆ) 1972** (இ) 1976 (ஈ) 1978

6. பூமிதான இயக்கத்தைத் தொடங்கியவர்
   (அ) ராம் மனோகர் லோகியா (ஆ) ஜெயப்பிரகாஷ் நாராயணன்
   **(இ) வினோபா பாவே** (ஈ) சுந்தர்லால் பகுகுணா

7. கூற்று: ஜமீன்தாரிமுறை ஒழிப்பு அதன் முக்கிய நோக்கத்தில் ஒரு பகுதியையே எட்டியது.
   காரணம்: பல நிலச்சுவான்தாரர்கள் குத்தகைதாரர்களை வெளியேற்றி நிலம் அவர்களது சுயகட்டுப்பாட்டின் கீழ் வேளாண்மையில் உள்ளதாக உரிமை கோரினர்.
   **(அ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
   (ஆ) கூற்று மற்றும் காரணம் சரி. காரணம் கூற்றை விளக்கவில்லை.
   (இ) கூற்று சரி. காரணம் தவறு.
   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

8. தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறைச் சட்டம் எந்தஆண்டு நிறைவேற்றப்பட்டது?
   **(அ) 1951** (ஆ) 1961 (இ) 1971 (ஈ) 1972

9. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் எந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டது?
   **(அ) 2005** (ஆ) 2006 (இ) 2007 (ஈ) 2008

10. எந்த ஆண்டு இந்திய பொதுத்துறை நிறுவனங்கள் கடும் நெருக்கடியைச் சந்தித்தன?
   (அ) 1961 **(ஆ) 1991** (இ) 2008 (ஈ) 2005

11. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புச் சட்டம் (MGNREGA) எத்தனை நாட்கள் வேலைவாய்ப்பை ஒரு தனிநபருக்கு வழங்குகிறது?
   (அ) 200 (ஆ) 150 **(இ) 100** (ஈ) 75

12. டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் எப்போது அமைக்கப்பட்டது?
   (அ) 1905 (ஆ) 1921 **(இ) 1945** (ஈ) 1957

13. 1951 ஆம் ஆண்டில் இந்தியாவில் எத்தனை பொதுத்துறை நிறுவனங்கள் செயல்பட்டன?
   **(அ) 5** (ஆ) 7 (இ) 6 (ஈ) 225

**பாடம் – 10**

1. கீழ்க்கண்டவற்றில் எது சுதந்திரமான வர்த்தக நகரம் இல்லை?
   (அ) நூரெம்பெர்க் (ஆ) ஆன்ட்வெர்ப் (இ) ஜெனோவா **(ஈ) செயின்ட் பீட்டர்ஸ்பர்க்**

2. கீழ்க்கண்டவற்றில் எது சமயத்தை இரண்டாம் நிலைக்கு தள்ளியது?
   **(அ) மறுமலர்ச்சி** (ஆ) சமயச் சீர்திருத்தம்
   (இ) புவியியல் கண்டுபிடிப்பு (ஈ) வர்த்தகப் புரட்சி

3. கீழ்க்கண்ட போப்பாண்டவர்களில் இத்தாலிய மறுமலர்ச்சிக்கு ஆதரவாகச் செயல்படாதவர் யார்?
   (அ) ஐந்தாம் நிக்கோலஸ் (ஆ) இரண்டாம் ஜூலியஸ் (இ) இரண்டாம் பயஸ் **ஈ) மூன்றாம் பால்**

4. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எவருடைய வெற்றி பெரிதும் ஊக்கம் தந்தது?
   (அ) மார்க்கோபோலோ (ஆ) ரோஜர் பேக்கன் **(இ) கொலம்பஸ்** (ஈ) பார்தோலோமியோ டயஸ்

5. கூற்று: காகிதம் கி.மு (பொ.ஆ.மு) இரண்டாம் நூற்றாண்டில் சீனாவில் தோன்றியது.
காரணம்: நகரும் அமைப்பிலான அச்சு இயந்திரத்தை ஜெர்மனி கண்டுபிடித்தது.
(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
**(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.**
(இ) கூற்று சரி. காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

6. பின்வருவனவற்றில் எது மறுமலர்ச்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு யோசனை அல்ல?
(அ) பகுத்தறிவு வாதம் (ஆ) ஐயுறவுவாதம் **(இ) அரசில்லா நிலை** (ஈ) தனித்துவம்

7. நவீன செயல்முறை அறிவியலின் தந்தை எனக் கருதப்படுபவர் யார்?
(அ) அரிஸ்டாட்டில் (ஆ) பிளாட்டோ **(இ) ரோஜர் பேக்கன்** (ஈ) லாண்ட்ஸ்டெய்னர்

8. மனிதகுலத்தை சமயமரபு அல்லது அதிகாரம் மூலமாக ஆட்சி செலுத்தாமல் காரணங்கள் மூலம் ஆட்சி செலுத்தவேண்டும் என்று விரும்பியவர் யார்?
(அ) தாந்தே (ஆ) மாக்கியவல்லி **(இ) ரோஜர் பேக்கன்** (ஈ) பெட்ரார்க்

9. துருக்கியர்களுக்கு எதிரான போரில் மேற்கத்திய நாடுகளின் உதவியை நாடி இத்தாலிக்கு சென்றவர் யார்?
(அ) ஜியோவனி அவுரிஸ்பா **(ஆ) மேனுவல் கிரைசாலொரஸ்**
(இ) ரோஜர் பேக்கன் (ஈ) கொலம்பஸ்

10.கூற்று: கலிலியோ கலிலி தேவாலய விரோத போக்குக்காக கிறித்தவ திருச்சபையால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.
காரணம்: சூரியனை மையமாக வைத்து கோள்கள் சுற்றுகின்றன என்ற கோபர்நிகஸின் சூரியமையக் கோட்பாட்டை அவர் ஏற்றார்.
**(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

11. கீழ்க்கண்டவற்றில் எது சரியானஅறிக்கை அல்லது அறிக்கைகள்?
அறிக்கைI: இத்தாலியர்கள் தாங்கள் பண்டைய வைக்கிங்கின் வழித் தோன்றல்கள் என்ற நம்பிக்கையை பாதுகாக்க முயன்றனர்.
அறிக்கைII: துப்பாக்கிகள் மற்றும் வெடிமருந்து மூலமாக கடல் பயண ஆபத்துகள் குறைக்கப்பட்டன.
அறிக்கைIII: கிறித்தவ சமயத்தைப் பரப்பும் ஆர்வம் புதிய நிலப்பகுதிகளை கண்டுபிடிப்பதில் ஊக்கம் தந்தது.
அறிக்கைIV: பெர்டினான்ட் மெகல்லன் மேற்கு நோக்கிப் பயணித்து பிரேசிலைக் கண்டுபிடித்தார்.
(அ) I, II மற்றும் III **(ஆ) II மற்றும் III** (இ) I மற்றும் III (ஈ) அனைத்தும் சரி

12. கீழ்க்கண்டவற்றில் எது லியானர்டோ டாவின்சியின் ஓவியம் இல்லை?
(அ) வர்ஜின் ஆஃப் ராக்ஸ் (ஆ) இறுதி விருந்து
(இ) மோனலிசா **(ஈ) மடோனாவும் குழந்தையும்**

13. போப்பாண்டவரால் கட்டப்பட்ட ரோமில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தை நவீனமயமாக்கியவர் யார்?
(அ) டோனடெல்லா (ஆ) ரபேல் (இ) லியானர்டோ டாவின்சி **(ஈ) மைக்கேல் ஆஞ்சிலோ**

14. கீழ்க்கண்டவற்றில் எது சரியாக பொருத்தப்படவில்லை?
(அ) மார்லோவ் – டிடோ (ஆ) ஷேக்ஸ்பியர் – கிங் லியர்
(இ) பிரான்சிஸ் பேக்கன் – நோவும் ஆர்கனும் **(ஈ) ரோஜர் பேக்கன் – டெக்கமரான்**

15. கூற்று: துருக்கிய வெற்றிகளும் கான்ஸ்டான்டி நோபிளின் வீழ்ச்சியும் கிழக்குப் பகுதிக்கு ஒரு கடல் வழித்தடத்தை கண்டுபிடிக்க ஊக்கமாக இருந்தது.
காரணம்: கிழக்கில் இருந்து கிடைக்கும் பொருட்களின் தேவைகள் அதிகரித்ததால் கடல்வழி வாணிபத்தை கட்டுப்படுத்த ஐரோப்பிய நாடுகள் விரும்பின.
**(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

16. மெகல்லனின் மறைவுக்குப் பிறகு எந்தக்கப்பல் திரும்பியது?
(அ) சாண்டாமரியா (ஆ) பிண்ட்டா (இ) நினா **(ஈ) விட்டோரியா**

17. ஸ்பெயினுக்காக மெக்சிகோவைக் கைப்பற்றியவர் யார்?
(அ) பெட்ரோ காப்ரல் (ஆ) கொலம்பஸ் **(இ) ஹெர்னன் கார்ட்ஸ்** (ஈ) ஜேம்ஸ்குக்

18. இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றியால் மேலாதிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?
(அ) 1519 (ஆ) 1532 (இ) 1533 **(ஈ) 1534**

19. கூற்று: கொள்ளை நோய்க்கான காரணங்களை விளக்க முடியாததால் கொள்ளைநோய் தேவாலயத்தின் நிலையை பலவீனப்படுத்தியது
காரணம் : போப்பாண்டவரின் அதிகாரம் பெரும் சவால்களை எதிர்கொண்டது.
**(அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு காரணம் சரி.

20. ஏழாம் கிரிகோரியால் கத்தோலிக்க திருச்சபை நடவடிக்கைகளில் இருந்து விலக்கி வைக்கபட்ட ஆட்சியாளர் யார்?
(அ) ஏழாம் ஹென்றி (ஆ) எட்டாம் ஹென்றி (இ) இரண்டாம் ஹென்றி **(ஈ) நான்காம் ஹென்றி**

## பாடம் 11

1. வடஅமெரிக்காவில் முதன் முதலில் குடியேறிய ஐரோப்பியர்கள்
(அ) போர்த்துகீசியர் (ஆ) ஸ்பானியர் (இ) டேனியர் **(ஈ) ஆங்கிலேயர்**

2. நியூ ஆம்ஸ்டர்டாமிற்கு …………………… என மறுபெயர் சூட்டப்பட்டது.
(அ) வாஷிங்டன் **(ஆ) நியூயார்க்** (இ) சிக்காகோ (ஈ) ஆம்ஸ்டர்டாம்

3. கூற்று: ஆங்கிலேயர் நாவாய்ச் சட்டங்களை இயற்றினர்
காரணம்: காலனி நாடுகளின் உற்பத்திப் பொருட்கள் ஆங்கிலேயக் கப்பல்களின் மூலமாக மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென்பதைச் இச்சட்டம் கட்டாயப்படுத்தியது.
**(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

4. கூற்று: 1770இல் இங்கிலாந்து தேயிலையைத் தவிர ஏனைய பொருட்களின் மீதான வரிகளை ரத்து செய்தது.
காரணம்: காலனி நாடுகளின் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வரிவிதிக்கும் உரிமை ஆங்கிலேய பாராளுமன்றத்திற்கு உண்டு என்பதை உறுதிப்படுத்தவே தேயிலையின் மீதான வரி தக்கவைத்துக் கொள்ளப்பட்டது.

**(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**
(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.
(இ) கூற்று சரி. காரணம் தவறு.
(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

5. பாஸ்டன் தேநீர் விருந்து நிகழ்வு ………………… இல் நடைபெற்றது.
(அ) 1775 **(ஆ) 1773** (இ) 1784 (ஈ) 1799

6. கூற்று: ஜார்ஜியா தவிர ஏனைய காலனிகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பொறுத்து கொள்ள முடியாதச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமெனக் கோரினர்.

காரணம்: அதுவரையிலும் ஆங்கிலப் பொருட்களைப் புறக்கணிப்பது என காங்கிரஸ் முடிவு செய்தது.

**(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

7. கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது.

கூற்று 1: 1776 ஜூலை 4இல் பதின்மூன்று காலனிகளும் இங்கிலாந்திடமிருந்து விடுதலை பெற்றதாக அறிவித்தன.

கூற்று II: சுதந்திரப் பிரகடனத்தைத் தயாரித்ததில் தாமஸ்ஜெபர்சன் மிக முக்கியப் பங்கினை வகித்தார்.

(அ) I (ஆ) II (இ) இரண்டும் தவறு **(ஈ) இரண்டும் சரி**

8. அமெரிக்க சுதந்திரப் போரில் ஆங்கில படைகளுக்குத் தலைமை தாங்கியவர்

(அ) ரிச்சட்டு லீ (ஆ) ஜார்ஜ் வாஷிங்டன் **(இ) வில்லியம் ஹோவே** (ஈ) ராக்கிங்காம்

9. கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று I: பிரெஞ்சு சமூகத்தின் பெரும்பகுதி விவசாயிகளால் ஆனது.

கூற்று II: பிரெஞ்சு விவசாயிகள் பண்ணை அடிமைகளாய் இருந்தனர்.

கூற்று III: வாரத்தில் சில நாட்களில் விவசாயிகள் தங்கள் பிரபுக்களுக்காகச் சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்தாக வேண்டும்.

**(அ) I மற்றும் II** (ஆ) II மற்றும் III (இ) I மற்றும் III (ஈ) அனைத்தும் சரி

10. டென்னிஸ் மைதான உறுதிமொழிக்கு இட்டுச் சென்ற எதிப்புக்குத் தலைமையேற்ற பிரபு ஆவார்.

(அ) மாரட் (ஆ) டாண்டன் (இ) லஃபாயட் **(ஈ) மிராபு**

11. கூற்று: வளர்ந்து கொண்டிருந்த பூர்ஷ்வாக்கள் தங்கள் சமூகத்தகுதிக்கு நிகரான அரசியல் அதிகாரம் வேண்டினர்.

காரணம்: அரசாங்கத்தில் செல்வாக்குப் பெற வேண்டுமென அவர்கள் விரும்பினர்.

**(அ) கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | |
|---|---|
| (அ) மாண்டெஸ்கியூ | 1. ஜேகோபியர்கள் |
| (ஆ) வால்டர் | 2. ஆங்கிலேய நாட்டுத் தத்துவவாதி |
| (இ) பயங்கர ஆட்சி | 3. பதினான்காம் லூயியின் காலம் |
| (ஈ) ஜான் லாக் | 4. சட்டங்களின் சாரம் |

(அ) 1 3 4 2 **(ஆ) 4 3 1 2** (இ) 4 1 2 3 (ஈ) 1 4 3 2

13. பாஸ்டில் சிறைதகர்ப்பு இல் நடந்தது.

(அ) 1789, ஜூன் 5 **(ஆ) 1789, ஜூலை** 14 (இ) 1789, நவம்பர் 11 (ஈ) 1789, மே1

14. பிரெஞ்சுப் புரட்சியின் போது அறிவிக்கப்பட்ட மனிதன் மற்றும் குடிமக்கள் உரிமைகள் பிரகடனம் பெண்களைத் தவிர்த்துவிட்டதால் அதன் மேல் ………………… அதிருப்தி கொண்டிருந்தார்.

**(அ) ஒலிம்பே டி கோஜெஸ்** (ஆ) மேரி அன்டாய்னெட் (இ) ரோஜெட் டி லிஸ்லி (ஈ) ரோபஸ்பியர்

15. பதினாறாம் லூயியின் அதிகாரபூர்வமான வசிப்பிடமாக இருந்தது.

(அ) வெர்செய்ல்ஸ் (ஆ) தௌலன் (இ) மார்செய்ல்ஸ் **(ஈ) டியூலெர்ஸ்**

16. ………………… தொடக்கத்தில் செயின்ட் டோமிங்கோ என அறியப்பட்டது.

(அ) மெக்சிகோ (ஆ) பனாமா **(இ) ஹைட்டி** (ஈ) ஹவானா

17. மெக்சிகோவில் புரட்சிக்குத் தலைமையேற்றவர்

(அ) சைமன் பொலிவர் (ஆ) ஜோஸ் மரியா மோர்லோ

(இ) பெர்டினான்டு டிலெஸ்ஸெப்ஸ் **(ஈ) மிகுவல் ஹிடல் கோ**

18. அர்ஜென்டினாவை விடுதலையடையச் செய்தவர்.

**(அ) சான் மார்ட்டின்** (ஆ) டாம் பெட்ரோ (இ) பெர்னார்டோ ஓ ஹிக்கின்ஸ் (ஈ) மரினாமோர்லஸ்

19. ................ நகரம் 'காட்டன் பொலிஸ்' எனும் புனைப்பெயரைப் பெற்றது.

**(அ) மான்செஸ்டர்** (ஆ) லங்காசயர் (இ) லிவர்பூல் (ஈ) கிளாஸ்கோ

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) மைக்கேல் பாரடே – 1) ஆர்க்ரைட்

(ஆ) எலியாஸ் ஹோவே –2) ராபர்ட் புல்டன்

(இ) நீர்ச் சட்டகம் – 3) மின்சாரம்

(ஈ) நீராவிப் படகு – 4) தையல் இயந்திரம்

(அ) 1 3 4 2 (ஆ) 1 4 2 3 **(இ) 3 4 1 2** (ஈ) 3 4 2 1

## பாடம் – 12

1. நெப்போலியன் முதன்முறை நாடு கடத்தப்பட்டு சிறைவைக்கப்பட்ட இடம் ஆகும்.

**(அ) எல்பா** (ஆ) செயின்ட் ஹெலனா (இ) கார்சிகா (ஈ) வாட்டர்லூ

2. பிரிட்டிஷ், பெல்ஜிய மற்றும் பிரஷ்யக் கூட்டுப் படைகளால் நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட வாட்டர்லூ அமையப் பெற்ற இடம்

(அ) பிரான்ஸ் (ஆ) ஜெர்மனி **(இ) பெல்ஜியம்** (ஈ) இத்தாலி

3. கூற்று: கற்பனைவாத சோஷலிஸ்டுகள் உற்பத்திக் கருவிகளைப் பொதுவில் கொண்ட மாதிரி சமூகங்களைப் பரிந்துரைத்தனர்.

காரணம்: அவர்கள் வறுமையும், வேலையில்லா திண்டாட்டமும் ஒழிந்த சோஷலிச சமூகத்தை வளர்தெடுக்கும் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தனர்.

**(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

4. இங்கிலாந்தில் தொழிற்சங்கங்களுக்கு சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டஆண்டு .

(அ) 1815 (ஆ) 1822 **(இ) 1824** (ஈ) 1827

5. கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் சரியானவற்றை தெரிவு செய்துப் பொருத்துக

(அ) புதிய கிறித்தவம் – 1) வில்லியம் லவெட்

(ஆ) எ நியூ வியூ ஆப் சொசைட்டி – 2) லூயி பிளாங்க்

(இ) ரெவ்யூ டூ ப்ராக்ரஸ் –3) செயின்ட் சீமோன்

(ஈ) மக்களின் பட்டயம் – 4) இராபர்ட் ஓவன்

(அ) 2, 3, 4, 1 **(ஆ) 3, 4, 2, 1** (இ) 1, 4, 3, 2 (ஈ) 3, 1, 2, 4

6. மார்க்சும், ஏங்கல்சும் தங்களின் கம்யூனிஸ்ட் மேனிபெஸ்டோ என்ற நூலை ……………… ஆண்டில் வெளியிட்டனர்.

(அ) 1842 **(ஆ) 1848** (இ) 1867 (ஈ) 1871

7. கூற்று: மக்கள் உரிமை சாசன இயக்கம் ஒரு கலவரமோ, புரட்சியோ அல்ல.

காரணம்: அது தொழிலாளர் வர்க்கத்தின் கட்டுப்படுத்தப்பட்ட இயக்கமாகும்.

**(அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

8. சாசனத்துவவாதிகளின் முக்கியத்துவம் பெற்ற செய்தித்தாள் ஆகும்.

(அ) ஏழை மனிதனின் பாதுகாவலன் (ஆ) பட்டயம்

**(இ) வடக்கத்திய நட்சத்திரம்** (ஈ) இல் ரிசார்ஜி மென்டோ

9. நெப்போலியன் போனபார்ட்டின் மருமகனான லூயி நெப்போலியன் சூடிக்கொண்ட பட்டம் என்பதாகும்.

(அ) இரண்டாம் நெப்போலியன் **(ஆ) மூன்றாம் நெப்போலியன்**

(இ) ஆர்லியன்ஸின் கோமகன் (ஈ) நான்காம் நெப்போலியன்

10. கோட் டெ லா நேச்சர் என்ற நூலின் ஆசிரியர் ஆவார்.

(அ) சார்லஸ்ஃபூரியர் **(ஆ) எட்டியன்–கேப்ரியல் மோராலி**

(இ) செயின்ட் சீமோன் (ஈ) பகுனின்

11. கூற்று: தேசியவாதத்திற்கு 1848ஆம் ஆண்டு தனித்துவமான வெற்றிகள் கிடைத்த ஆண்டாகும். காரணம்: சர்வாதிகாரம் மறைந்தது போன்ற பிம்பம் சிறிது காலத்திற்குத் தோன்றியது.

**(அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

12. இரண்டாம் சர்வதேசம் ………………. நகரில் துவக்கப்பட்டது.

**(அ) பாரிஸ்** (ஆ) பெர்லின் (இ) லண்டன் (ஈ) ரோம்

13. இளம் இத்தாலி இயக்கம் …………….. ஆண்டு துவக்கப்பட்டது.

(அ) 1822 (ஆ) 1827 **(இ) 1831** (ஈ) 1846

14. பார்மா, மொடினா, டஸ்கனி ஆகிய பகுதிகளுக்குப் பிறகு பியட்மாண்ட்–சார்டினியா இராஜ்ஜியத்தோடு இணைக்கப்பட்டது.

**(அ) பொது வாக்கெடுப்பு** (ஆ) சார்லஸ் ஆல்பர்டின் படையெடுப்பு

(இ) சால்ஃபரினோ உடன்படிக்கை (ஈ) வில்லா ஃப்ராங்கா உடன்படிக்கை

15. "இரு உலகங்களின் நாயகன்" என கொண்டாடப்பட்டவர் ………………… ஆவார்.

(அ) சார்லஸ் ஆல்பிரட் (ஆ) பிஸ்மார்க் (இ) மூன்றாம் நெப்போலியன் **(ஈ) கரிபால்டி**

16. …………… இடையே ஏழு வாரப் போர் நடந்தது.

(அ) டென்மார்க், பிரஷ்யா (ஆ) பியட்மாண்ட்–சார்டினியா, ஆஸ்திரியா

(இ) பிரான்ஸ், பிரஷ்யா **(ஈ) ஆஸ்திரியா, பிரஷ்யா**

17. பிராங்கோ–பிரஷ்யப் போர் உருவாகக் காரணமாக விளங்கியது …………………… ஆகும்

(அ) காஸ்டெய்ன் மாநாடு **(ஆ) எம்ஸ் தந்தி**

(இ) பிரேக்உடன்படிக்கை

(ஈ) அல்சேஸ், லொரைன் பகுதிகளைக் கட்டுப்படுத்துவதில் எழுந்த சர்ச்சை.

18. ஜெர்மன் தேசத்திற்கு தொடர் சொற்பொழிவுகளை வழங்கியவர் …………………… ஆவார்.

(அ) ஜோஹன் வான் ஹெர்டர் (ஆ) பிரைட்ரி ஷெலிகெல்

**(இ) J.G. ஃபிக்ட்** (ஈ) ஆட்டோவான் பிஸ்மார்க்

19. கூற்று: J.G. ஃபிக்ட் ஜெர்மானியர்களிடையே தேசியவாதத்தை ஊட்டினார்.
காரணம்: ஃபிக்ட் இளம் இத்தாலி இயக்கத்தை சேர்ந்தவர் ஆவார்.

(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

**(இ) கூற்று சரி. காரணம் தவறு.**

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

20. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளில் சரியானவற்றைத் தெரிவுசெய்து பொருத்துக

(அ) மெட்டர்னிக் – 1) பியட்மாண்ட்– சார்டினியாவின் ஆட்சியாளர்

(ஆ) பத்தாம் சார்லஸ் – 2) பிரெஞ்சு வெளியுறவுத்துறை அமைச்சர்

(இ) கிராமோன்ட் – 3) பிரெஞ்சு மன்னர்

(ஈ) சார்லஸ் ஆல்பர்ட் –4) ஆஸ்திரிய–ஹங்கேரியின் பிரதம அமைச்சர்

(அ) 1, 3, 4, 2 (ஆ) 4, 2, 1, 3 (இ) 4, 1, 2, 3 **(ஈ) 4, 3, 2, 1**

**பாடம் 13**

1. ஜெர்மனியின் முன்னேறி வந்து கொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?

**அ) மார்னே போர்** ஆ) டானென்பர்க் போர் இ) வெர்டூன் போர் ஈ) சோம் போர்

2. 'அரசின் தடையற்ற' (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் .................. ஆவார்.

அ) ஜான் A. ஹாப்சன் ஆ) கார்ல் மார்க்ஸ் இ) ஃபிஷர் **ஈ) கௌர்னே**

3. An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations என்ற நூலை எழுதியவர்………… ஆவார்.

**அ) ஆடம் ஸ்மித்** ஆ) தாமஸ் பைன் இ) குஸ்னே ஈ) கார்ல் மார்க்ஸ்

4. இங்கிலாந்து ………… ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.

**அ) 1833** ஆ) 1836 இ) 1843 ஈ) 1858

5. கூற்று: பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் பல நாடுகள் மிகை உற்பத்தியால் பிரச்சனைகளை எதிர்கொண்டன.

காரணம்: மிகை உற்பத்தி, நாடுகளை புதிய சந்தைகளைக் கண்டுபிடிக்க அழுத்தங்கொடுத்தது.

**அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

இ) கூற்று சரி. காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி

6. 1879ஆம் ஆண்டில் …………… கட்டண சட்டத்தை இயற்றியது.

**அ) ஜெர்மனி** ஆ) பிரான்ஸ் இ) பிரிட்டன் ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

7..................க்குப்பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

அ) ரஷ்ய–ஜப்பனியப்போர் ஆ) இரண்டாம் அபினிப்போர்

இ) இரண்டாம் ஆங்கிலோ–சீனப்போர் **ஈ) சீன–ஜப்பானியப்போர்**

8. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்த நாடு ஆகும்.

அ) ஸ்பெயின் ஆ) பிரிட்டன் **இ) அமெரிக்க ஐக்கிய நாடு** ஈ) பிரான்ஸ்

9. எந்தநாடு 21 நிர்ப்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?

அ) பிரான்ஸ் ஆ) ரஷ்யா **இ) ஜப்பான்** ஈ) பிரிட்டன்

10. ………………… ஐ அடிப்படையாகக் கொண்டு அல்பேனியா எனும் புதுநாடு உருவாக்கப்பட்டது.

அ) புக்காரெஸ்ட் உடன்படிக்கை,1913 ஆ) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை, 1919

**இ) லண்டன் உடன்படிக்கை, 1913** ஈ) செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை

11. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை?

அ) பல்கேரியா ஆ) ஆஸ்திரிய–ஹங்கேரி இ) துருக்கி **ஈ) மாண்டி நீக்ரோ**

12. பாரிசை நெருங்கிக் கொண்டிருந்த தாக்குதலை உணர்ந்து பிரெஞ்சு அரசு ………… பகுதிக்கு நகர்ந்து சென்றது.

அ) மார்செல்லிஸ் **ஆ) போர்டியாக்ஸ்** இ) லியோன்ஸ் ஈ) வெர்செய்ல்ஸ்

13. கீழ்க்காண்பனவற்றுள் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் பகுதியாக கருதப்படாதது எது?

அ) ஜெர்மனி அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்

ஆ) சார் பள்ளத்தாக்கு பிரான்சிற்கு வழங்கப்பட வேண்டும்

இ) ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்துக்கொள்ள வேண்டும்

**ஈ) டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்**

14. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.

அ) விடுதலைஆணை – இரண்டாம் அலெக்ஸாண்டர்

ஆ) இரத்த ஞாயிறு – இரண்டாம் நிக்கோலஸ்

இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் – முதலாம் நிக்கோலஸ்

**ஈ) பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்**

15. கூற்று: பன்னாட்டு சங்கம் அதிகாரத்தை செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தது.
காரணம்: "கூட்டுப்பாதுகாப்பு" என்ற கொள்கையை மெய் வழக்கத்திற்குள் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

**அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றைவிளக்குகிறது**

ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றைவிளக்கவில்லை

இ) கூற்று சரி. காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி

16. கூற்று: உலகையே கடுமையாக பாதித்தப் பொருளாதார பெருமந்தம் சோவியத் ரஷ்யாவை பாதிக்கவில்லை.
காரணம்: நிலம் சமூக உடைமையாக அறிவிக்கப்பட்டு ஏழை மக்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

**அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

இ) கூற்று சரி. காரணம் தவறு

ஈ) கூற்று தவறு. காரணம் சரி

17. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொது செயலாளரான எரிக் ட்ரம்மோன்ட் ……………… நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

அ) பிரான்ஸ் ஆ) தென்னாப்பிரிக்கா **இ) பிரிட்டன்** ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

18. பன்னாட்டு சங்கம் …………… .ம் ஆண்டு கலைக்கப்பட்டது.

அ) 1939 ஆ) 1941 இ) 1945 **ஈ) 1946**

19. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார்?

அ) ஜெனரல் லூடன்டார்ஃப் **ஆ) வான் ஹிண்டன்பர்க்**

இ) ஜெனரல் ஸ்மட்ஸ் ஈ) ஆல்ஃபிரட் வான் பெத்மண்

20. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?

**அ) அவந்தி** ஆ) ப்ராவ்தா இ) மார்க்சிஸ்ட் ஈ) மெய்ன் காம்ப்

**பாடம் 14**

1. கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போர் உருவாக எது காரணமாக இருக்கவில்லை ?

(அ) ஜெர்மனியோடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நீதியற்ற தன்மை

(ஆ) பன்னாட்டு சங்கத்தின் தோல்வி

(இ) 1930களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்

**(ஈ) காலனிய நாடுகளில் ஏற்பட்ட தேசிய விடுதலை இயக்கங்கள்**

2. கெல்லாக் –பிரையாண்ட் ஒப்பந்தம் ஆண்டில் கையெழுத்தானது.

(அ) 1927 **(ஆ) 1928** (இ) 1929 (ஈ) 1930

3.கூற்று: ஆயுதக்குறைப்பு மாநாடு பன்னாட்டு சங்கத்தால் ஜெனீவாவில் நடத்தப்பட்ட து.
காரணம்: பிரான்சுக்கு சமமாக ஜெர்மனி தளவாடங்களை கொண்டிருக்க முயல்வது பேச்சு வார்த்தைகளின் ஒரு முக்கிய அம்சமாக தோன்றியது.

**(அ) கூற்றும், காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது**

(ஆ) கூற்றும், காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(இ) கூற்று சரி. காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

4. சீனாவிடமிருந்து மஞ்சூரியாவை ஜப்பான் எந்த ஆண்டு படையெடுத்து கைப்பற்றியது?

**(அ) 1931** (ஆ) 1932 (இ) 1933 (ஈ) 1934

5. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவில் ஐரோப்பியக் கண்டத்திற்குள் தொழிற்துறையில் வலிமையான சக்தியாக ……………………………நாடு உருவாகியிருந்தது.

(அ) பிரான்ஸ் (ஆ) ஸ்பெயின் **(இ) ஜெர்மனி** (ஈ) ஆஸ்திரியா

6. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளின்படி ஜனவரி 1935இல் பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முடிவானது.

(அ) சூடட்டன்லாந்து (ஆ) ரைன்லாந்து **(இ) சார்** (ஈ) அல்சேஸ்

7. கூற்று: இரண்டாம் உலகப்போரின் காலத்தில் போர் முறைகள் பெரிதும் மாற்றமடைந்திருந்தன.
காரணம்: அகழிப் போர் முறை ஒதுக்கப்பட்டு விமான குண்டுவீச்சு பிரபலமானது.

**(அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

(ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை .

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

8. ஜெர்மனி 1939இல் ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை…………நாட்டோடு ஏற்படுத்திக்கொண்டது.

(அ) ஆஸ்திரியா (ஆ) இத்தாலி **(இ) ரஷ்யா** (ஈ) பிரிட்டன்

9. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்குவதற்குத் திட்டம் வகுத்தவர் …………………… ஆவார்.

**(அ) யாமமோடோ** (ஆ) ஸ்கூஸ்னிக் (இ) இரண்டாம் கெய்சர்வில்லியம் (ஈ) ஹிரோஹிடோ

10. குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்ட் அறிமுகப்படுத்திய கடன்–குத்தகை முறை ……………… வகையில் உதவிபுரிந்தது.

**(அ) பாசிச சக்திகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு கூடுதல் வீரர்களை அனுப்புதல்**

ஆ) யூதர்களை ஹிட்லரின் படைகள் கட்டவிழ்த்து விட்ட கொலை வெறித் தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்

(இ) தோழமை நாடுகளின் வளங்களைப் பெருக்கி, அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களையும், வெடி பொருட்களையும் வழங்குதல்

(ஈ) இரண்டாம் உலகப்போரில் காயமடைந்தோருக்கு மருத்துவ வசதிகளை ஏற்படுத்துதல்

11. அமெரிக்க ஐக்கிய நாட்டின் படைகளை ஆகஸ்ட் 1942இல் பசிபிக் பகுதியில் தலைமையேற்று வழி நடத்தியவர் …………………… ஆவார்.

**(அ) மெக்ஆர்தர்** (ஆ) ஐசன் ஹோவர் (இ) ஜெனரல் டி கால் (ஈ) ஜார்ஜ் மார்ஷல்

12. ஜப்பானிய கடற்படையை அமெரிக்க ஐக்கிய நாட்டின் கடற்படை தோற்கடித்தமை ………… போரிலாகும்.

(அ) பிரிட்டன் (ஆ) குவாடல் கனல் (இ) எல் அலாமின் **(ஈ) மிட்வே**

13. ஜெர்மானியப் படைகள் முதல் பின்னடைவைச் சந்தித்தது ………………… என்னுமிடத்தில் ஆகும்.

(அ) போட்ஸ்டாம் **(ஆ) எல் அலாமின்** (இ) ஸ்டாலின்கிராட் (ஈ) மிட்வே

14.கீழ்க்காண்பனவற்றுள் போட்ஸ்டாம் மாநாட்டின் அறிவிப்புகளில் அடங்காத ஒன்று எது?

(அ) கிழக்கு பிரஷ்யா இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண்டும்: அதில் வடக்குப்பகுதி சோவியத் நாட்டையும், தென் பகுதி போலந்தையும் சென்று சேரும்.

(ஆ) முன்பு சுதந்திர நகரமாக இருந்த டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு சேர்க்கப்படும்.

(இ) ஜெர்மனி நான்கு தொழில் மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, பிரித்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பகுதியும் முறையே சோவியத் நாடு, பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரான்ஸ், ஆகியவைகளின் கட்டுப்பாட்டில் விடப்படும்.

**(ஈ) ட்ரிஸ்டியை A மண்டலம் என்றும் B மண்டலம் என்றும் பிரிப்பதென்றானது. A மண்டலம் இத்தாலிக்கு கொடுக்கப்படவும், B மண்டலம் யுகோஸ்லோவியாவிற்கு வழங்கப்படவும் முடிவு செய்யப்பட்டது.**

15 கீழ்க்காண்பனவற்றுள் இரண்டாம் உலகப்போரின் விளைவுகளில் சேராத ஒன்று எது?

(அ) இரண்டாம் உலகப்போர் ஐரோப்பாவிலிருந்த பல முடியரசுகளுக்கு மரண அடி கொடுத்தது.

(ஆ) பிரிட்டனில் தொழிலாளர் கட்சி ஒரு பொதுநல அடிப்படை கொண்ட நாட்டை உருவாக்கியது.

**(இ) பாசிசவாதத்திற்கு எதிரான போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு வெற்றியை வழங்கியது.**

(ஈ) அமெரிக்க ஐக்கிய நாடும், சோவியத் நாடும் இரு வல்லரசுகளாக உருவெடுத்தன.

16. கீழ் பொருத்தப்பட்டிருப்பவையில் சரியான இணைகள் எது?

(1) ஜெனரல் டி கால் – பிரான்ஸ் (2) ஹேல் செலாஸி – எத்தியோப்பியா

(3) ஜெனரல் படோக்லியோ – ஜப்பான் (4) அட்மிரல் யாம்மோடோ – இத்தாலி

**(அ) (1) மற்றும் (2)** (ஆ) (2) மற்றும் (3) (இ) (3) மற்றும் (4) (ஈ) அனைத்தும்

17. பிரான்ஸ் இரண்டாம் அபினிப்போரில் பங்கெடுத்தது

(அ) பிரிட்டனுக்கு உதவிபுரிவதற்காக

ஆ) பிரான்சுக்கென தனி செல்வாக்கின் கோளத்தைஉருவாக்கிக் கொள்வதற்காக

**(இ) சமய செயல்பாடுகளுக்கு அனுமதிகோரும் பொருட்டு**

(ஈ) ஓபிய வணிகத்தில் ஈடுபடும் உரிமையை பிரான்ஸ் நாட்டினர் நிலைநாட்டுவதற்காக

18. மஞ்சு வம்சத்தின் காலம் ஆண்டு .................. வரை நீடித்தது.

(அ) 1908 (ஆ) 1911 **(இ) 1912** (ஈ) 1916

19. ஸ்பானிய –அமெரிக்கப்போர்........... சர்ச்சையை முன்னிறுத்தி 1898ஆம் ஆண்டில் நடைபெற்றது.

**(அ) கியூபா** (ஆ) பிலிப்பைன்ஸ் (இ) போர்டோ ரிக்கோ (ஈ) படாவியா

20. கூற்று: பிலிப்பைன்ஸ் 4 ஜூலை 1946ஆம் ஆண்டு விடுதலையடைந்தது.

காரணம்: அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஆதிக்கத்தின் கீழான தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பில் பிலிப்பைன்ஸ் இணைந்தது.

(அ) கூற்று, காரணம் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.

**(ஆ) கூற்று, காரணம் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.**

(இ) கூற்று சரி. காரணம் தவறு.

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி.

## பாடம் – 15

1. 1947இன் இறுதியில் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டிருந்த ஒரே நாடு

அ. கிழக்கு ஜெர்மனி **ஆ. செக்கோஸ்லோவாக்கியா** இ. கிரீஸ் ஈ. துருக்கி

2. கூற்று: ஸ்டாலின் சர்ச்சிலை ஒரு போர் விரும்பி என விமர்சித்தார்.

காரணம்: கம்யூனிசத்திற்கு எதிராக மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டுசேர வேண்டுமென சர்ச்சில் முன்னதாக அழைப்பு விடுத்திருந்தார்.

**அ. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம். கூற்றை விளக்குகிறது.**

ஆ. கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை .

இ. கூற்று சரி. காரணம் தவறு.

ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

3. 'பனிப்போர்' எனும் சொல்லை உருவாக்கியவர்

அ. பெர்னாட் பரூச் **ஆ. ஜார்ஜ் ஆர்வெல்** இ. ஜார்ஜ் கென்னன் ஈ. சர்ச்சில்

4. கூற்று: மார்ஷல் திட்டத்தை "டாலர் ஏகாதிபத்தியம்" என சோவியத் வெளியுறவுத்துறை அமைச்சர் இகழ்ந்தார்.

காரணம்: சோவியத்தின் கண்ணோட்டத்தில் மார்ஷல் திட்டமென்பது அமெரிக்காவின் செல்வாக்கைப் பரப்புவதற்கான சூழ்ச்சியே ஆகும்.

**அ. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ. கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை .

இ. கூற்று சரி. காரணம் தவறு.

ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

5. மார்ஷல் உதவித் திட்டத்தின் குறிக்கோள் .................

**அ. ஐரோப்பியப் பொருளாதாரத்தை மறுகட்டுமானம் செய்வது**

ஆ. முதலாளித்துவத் தொழில் முயற்சிகளைப் பாதுகாப்பது

இ. ஐரோப்பாவில் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிறுவுவது

ஈ. சோவியத் ரஷ்யாவிற்கு எதிராக இராணுவக் கூட்டமைப்பை உருவாக்குவது

6. ட்ரூமன் கோட்பாடு .................... பரிந்துரைத்தது

**அ. கம்யூனிசம் பரவுவதைத் தடுப்பதற்கான நிதியுதவி**

ஆ. காலனிகளிலுள்ள கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது

இ. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடுவது

ஈ. அமெரிக்கத் தளபதியின் தலைமையின் கீழ் ஐ.நா சபைக்கு நிரந்தரப் படையை உருவாக்குவது

7. கீழ்க்காண்பனவற்றை காலவரிசைப்படி ஒழுங்கு செய்யவும்.

1) வார்சா உடன்படிக்கை 2) சென்டோ 3) சீட்டோ 4) நேட்டோ

அ) 4 2 3 1 ஆ) 1 3 2 4 **இ) 4 3 2 1** ஈ) 1 2 3 4

8. …………………… பாக்தாத் உடன்படிக்கையின் குறிக்கோளாக இருந்தது.

அ. மத்திய கிழக்கில் இங்கிலாந்தின் தலைமையைப் பாதுகாப்பது

ஆ. அப்பகுதி சார்ந்த எண்ணை வளங்களைச் சுரண்டுவது

**இ. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கைத் தடுப்பது**

ஈ. ஈராக் அரசை வலிமை குன்றச் செய்வது

9. லெபனானில் அமெரிக்கா தலையிட்டதை …………………… எதிர்த்தது

அ. துருக்கி **ஆ. ஈராக்** இ. இந்தியா ஈ. பாகிஸ்தான்

10. "மூன்றாம் உலகம்" எனும் பதத்தை உருவாக் கியவர் ஆவார்.

**அ. ஆல்பிரட் சாவே** ஆ. மார்ஷல் இ. மோலோடோவ் ஈ. ஹாரி ட்ரூமன்

11. பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியானதைத் தேர்வு செய்க

அ. இந்தோனேசியா –1. ஜவகர்லால் நேரு

ஆ. எகிப்து –2. டிட்டோ

இ. கானா –3. குவாமி நுக்ருமா

ஈ. யுகோஸ்லோவியா –4. கமால் அப்துல் நாசர்

உ. இந்தியா –5. சுகர்னோ

அ. 5 3 4 2 1 ஆ. 1 3 2 4 5 **இ. 5 4 3 2 1** ஈ. 1 2 3 4 5

12. அணிசேரா இயக்கத்தின் முதல் உச்சி மாநாடு……………… ல் நடைபெற்றது.

**அ. பெல்கிரேடு** ஆ. பெய்ஜிங் இ. பாண்டுங் ஈ. பாலி

13. கூற்று: பன்னாட்டு சங்கம் ஒரு தோல்வி என்பதை இரண்டாம் உலகப்போர் நிரூபித்தது.

காரணம்: மற்றொரு போர் ஏற்படா வண்ணம் தடுக்க ஒரு சக்திவாய்ந்த அமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் உணர்ந்தனர்.

**அ. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.**

ஆ. கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.

இ. கூற்று சரி. காரணம் தவறு.

ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

14. ஐக்கிய நாடுகள் சபை 1945 அக்டோபர் 24இல் உருவானது.

அ. 100 உறுப்பினர்களுடன் ஆ. 72 உறுப்பினர்களுடன்

**இ. 51 உறுப்பினர்களுடன்** ஈ. 126 உறுப்பினர்களுடன்

15. பின்வரும் கூற்றுகளில் எக்கூற்றுகள் சரியானவை?

கூற்று 1: ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றம் பனிப்போரின் தொடக்கத்துடன் ஒருங்கே நடைபெற்றது.

கூற்று II: பனிப்போர் காலக்கட்டத்தில், போர்கள் நிகழாமல் தடுப்பதில் ஐ.நாசபை முக்கிய பங்காற்றியது.

கூற்று III: பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர்கள் தொடர்புடைய பிரச்சனைகளில் ஐ.நாசபை மௌனமான பார்வையாளராகவே இருந்தது.

அ) I, II ஆ) II,III இ. I, III **ஈ. மேற்கூறப்பட்ட அனைத்தும்**

16. சூயஸ் கால்வாய் செங்கடலை …………… இணைக்கிறது.

அ. ஏடன் வளைகுடாவுடன் ஆ. காம்பே வளைகுடாவுடன்

**இ. மத்திய தரைக்கடலுடன்** ஈ. அரபிக் கடலுடன்

17. ஐ.நாசபையின் முதல் பொதுச்செயலாளர் டிரிக்வேலை …………… சேர்ந்தவராவார்.

அ. பர்மா ஆ. ஜப்பான் இ. சிங்கப்பூர் **ஈ. நார்வே**

18.கூற்று: 2017இல் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேசெல்வதாக (Exit) அறிவித்தது.
காரணம்: பிரிட்டனின் வெளியேற்றம் 'பிரெக்ஸிட்' (Brexit) என அழைக்கப்படுகிறது.

அ. கூற்று, காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது.
**ஆ. கூற்று காரணம் இரண்டும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை.**
இ. கூற்று சரி. காரணம் தவறு.
ஈ. கூற்று தவறு. காரணம் சரி.

19. கிளாஸ்நாஸ்ட் குறிப்பது

**அ. ஒளிவுமறைவற்ற வெளிப்படைத் தன்மையை**
ஆ. சோவியத் கம்யூனிச கட்சியை ஜனநாயகப்படுத்தப்படுவதை
இ. சோவியத் ஐக்கிய பாராளுமன்றம் மறுகட்டமைப்புச் செய்யப்படுவதை
ஈ. பொதுவுடைமைத் தத்துவத்திற்குப் புத்துயிர் அளிப்பதை

20. சோவியத் யூனியன் --இல் சிதறுண்டது.

அ. நவம்பர் 17, 1991 **ஆ. டிசம்பர் 8, 1991** இ. மே 1, 1991 ஈ. அக்டோபர் 17, 1991

வரலாறு

## அலகு 1 – இந்தியாவில் தேசியத்தின் எழுச்சி

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. தேசியம் என்றால் என்ன?
   - ஒரு நாட்டிற்கு விசுவாசமாகவும், பக்தியோடும் இருத்தல்.
   - தனது நாட்டை உயர்வான இடத்தில் வைத்துப் பார்த்தல்.

2. புதிய நில உடமை உரிமைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை எழுதுக.
   - நிலம் விற்பனை பொருளாக மாற்றப்பட்டது.
   - வேளாண்மை வணிகம் மயமாக்கப்பட்டது.

3. அவுரி கலகம் குறிப்பு வரைக.
   - ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு எதிராக நடைபெற்றது.
   - அவுரியை பயிரிட இந்திய விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

4. இல்பர்ட் மசோதாவின் முக்கியத்துவத்தை விவாதி.
   - ரிப்பன் பிரபு அறிமுகப்படுத்தினார்.
   - இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்கலாம்.

5. தொடக்க கால தேசியவாதிகளை கண்டறிக
   - A.O. ஹூயூம்
   - W.C. பானர்ஜி
   - தாதாபாய் நௌரோஜி
   - கோகலே

### மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. மெக்காலேயின் இந்திய கல்வி குறித்து குறிப்புகளை ஆய்வு செய்க.
   - 1835 இல் இந்திய கல்வி குறித்த குறிப்புகளை வெளியிட்டார்.
   - ஆங்கில வழியில் கல்விக்கு ஆதரவாக வாதிட்டார்.
   - இதன் மூலம் பள்ளிகளும் கல்லூரிகளும் தொடங்கப்பட்டன.

2. பிரிட்டிஷ் இந்தியாவின் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிகைகளின் பங்கினை எழுதுக.
   - தன்னாட்சி மக்களாட்சி சிந்தனைகளை பரப்ப உதவியது.
   - அரசியலை விமர்சனம் செய்ய தொடங்கின. ❖ மக்களிடம் தேசிய உணர்வினை விதைத்தன.

3. பிரிட்டிஷ் இந்தியாவின் ஒப்பந்த கூலி தொழிலாளர்கள் முறை எவ்வழியில் ஏற்படுத்தப்பட்டது?
   - வேலை இழந்த இந்தியர்கள் ஒப்பந்த கூலிகளாக சென்றனர்.
   - பஞ்சங்கள் இந்தியர்களை கூலிகளாக மாற்றியது.
   - வறட்சி மற்றும் வறுமையால் மக்கள் ஒப்பந்த கூலிகளாக மாறினார்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக பொருளாதார காரணிகளை ஆய்க.

**சமூக காரணங்கள்**
   - இந்தியாவின் நில உடமை முறையை ஆங்கிலேயர் சிதைத்தனர்.
   - நிலம் விற்பனை பொருளாக மாற்றப்பட்டது.
   - வேளாண்மை வணிக மயமாக்கப்பட்டது.
   - ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு எதிராக அவுரி கலகம் நடைபெற்றது.
   - அவுரி செடியை பயிரிட இந்திய விவசாயிகள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.

**பொருளாதார காரணங்கள்**
   - ஆங்கில அரசு கட்டுப்பாடுகள் அற்ற வணிகக் கொள்கையை பின்பற்றியது.
   - ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின்போது தலையிடாகொள்கையை பின்பற்றினார்
   - இந்தியர்கள் ஐந்து வருடங்களுக்கு ஒப்பந்த குழிகளாக புலம் பெயர்ந்தனர்.

# அலகு 2 – தீவிர தேசியவாதத்தின் எழுச்சியும் சுதேசி இயக்கமும்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. மிதவாத தேசியவாதிகளின் இறைஞ்சுதல் கொள்கை என்றால் என்ன?
   - கவனமான அணுகுமுறை
   - மன்றாடுதல்
   - மனுக்களை சமர்ப்பித்தல்.

2. பிரிட்டிஷ் இந்தியாவில் தீவிர தேசியவாதிகளின் மையமாக விளங்கிய தலைவர்களை கண்டறிக
   - லாலா லஜபதி ராய்
   - பிபின் சந்திர பால்
   - பால கங்காதர திலகர்

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?
   - தூத்துக்குடியில் சுதேசி முயற்சிகள் அடக்கப்பட்டன.
   - சுதேசி தலைவர்கள் கைது செய்யப்பட்டு அவமதிக்கப்பட்டனர்.
   - இது இளைஞர்களிடையே கோபத்தை உருவாக்கியது.
   - கலெக்டர் ஆஷ் துரையை மணியாச்சியில் சுட்டு கொன்றார்.

2. வ உ சிதம்பரத்தின் சுதேசி இயக்க முயற்சிகளை எழுது.
   - சுதேசி நீராவி கப்பல் கம்பெனியை பதிவு செய்தார்
   - எஸ்.எஸ்.கலியா, எஸ்.எஸ்.லாவோ என்ற இரண்டு நீராவி கப்பல்களை வாங்கினார்
   - சுதேசி கப்பல் கம்பெனிக்கு ஆதரவு பெருகியது.

3. அலிப்பூர் வெடிகுண்டு வழக்கின் முக்கியத்துவம் குறித்து எழுதுக
   - ஆங்கில அதிகாரியை கொலை செய்ய திட்டமிடப்பட்டது.
   - குதிராம் போஸ், பிரஃபுல்லா சாக்கி ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டது.
   - தவறுதலாக 2 ஆங்கிலேய பெண்கள் கொல்லப்பட்டனர்.
   - பிரஃபுல்லா சாக்கி தற்கொலை செய்து கொண்டார்.
   - குதிராம் போஸ் தூக்கிலிடப்பட்டார்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. தமிழ்நாட்டில் சுதேசி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து எழுதுக (அல்லது) இந்திய தேசிய இயக்கத்தில் வ உ சிதம்பரத்தின் பங்கினை பற்றி எழுதுக

- ❖ திருநெல்வேலி மாவட்டத்தில் சுதேசி இயக்கம் பெரும் ஆதரவை பெற்றது.
- ❖ அரசுக்கு எதிராக வட்டார மொழியில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.
- ❖ மெரினா கடற்கரையில் சுதேசி கூட்டங்கள் நடைபெற்றன.
- ❖ 1906 இல் வ.உ.சி. சுதேசி கப்பல் கம்பெனியை பதிவு செய்தார்
- ❖ எஸ்.எஸ்.கலியா, எஸ்.எஸ்.லாவோ என்னும் இரண்டு நீராவி கப்பல்களை வாங்கினார்.
- ❖ ஜி. சுப்பிரமணியம் இந்து மற்றும் சுதேசி மித்ரன் என்னும் பத்திரிகைகளை தொடங்கினார்.
- ❖ 1908இல் வ.உ.சி, சிவா ஆகியோர் தேச துரோக குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர்.
- ❖ மாவட்ட ஆட்சியர் ஆஷ் துரையை மணியாச்சி ரயில் நிலையத்தில் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்.

# அலகு 3 – இந்திய விடுதலைப்போரில் முதல் உலகப்போரின் தாக்கம்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. அன்னிபெசண்ட் அம்மையார் வெளியிட்ட புத்தகம் மற்றும் வாராந்திர பத்திரிகைகளின் பெயர்களை கூறுக
    - ❖ வாராந்திர பத்திரிக்கை – தி காமன் வீல்.
    - ❖ புத்தகம் – இந்தியா எவ்வாறு விடுதலைப் போரை முன்னெடுத்து சென்றது.

2. கிலாபத் இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
    - ❖ துருக்கியை பலவீனப்படுத்த செவ்ரெஸ் ஒப்பந்தம் கையெழுத்தானது.
    - ❖ கலிபாவின் ஆளுமையை முடிவுக்குக் கொண்டுவர முடிவு செய்தன.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டை குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
    - ❖ இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.
    - ❖ தாய்நாடு பற்றிய பெருமை உணர்வை ஏற்படுத்துவது.

2. சென்னை தொழிற்சங்கத்தின் தாக்கம் மற்றும் முக்கியத்துவம் என்ன?
    - ❖ பி.பி. வாடியா என்பவரால் சென்னை தொழிற்சங்கம் நிறுவப்பட்டது.
    - ❖ இந்தியாவில் பல தொழிற்சங்கங்கள் தோன்றின.
    - ❖ தொழில் சங்கங்கள் தேசிய இயக்கத்தில் இணைத்துக் கொண்டன.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக

- ❖ நிர்வாகம் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாக செயல்பட்டன.
- ❖ மத்திய மாகாண சட்டப்பேரவையில் 4/5 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுத்தனர்.
- ❖ நிர்வாக சபையில் 1/2 உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்த இந்தியர்களாக இருக்க வேண்டும்.
- ❖ மாகாண சபை தேர்தலில் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகள் வழங்க காங்கிரஸ் சம்மதித்தது.
- ❖ அரசு அலுவலர்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்று இருக்க வேண்டும்.
- ❖ இந்து முஸ்லிம் ஒத்துழைப்புக்கு வழிவகுத்தது.

2. திலகர் மற்றும் அன்னிபெசண்ட் ஆகியோரின் கீழ் துவங்கப்பட்ட தன்னாட்சி இயக்கங்களின் செயல்பாடுகளை விளக்குக.

**திலகர்**

- ❖ 1916 இல் பம்பாயில் திலகரின் தன்னாட்சி இயக்கம் நிறுவப்பட்டது.
- ❖ மகாராஷ்டிரா, கர்நாடகா மத்திய மாகாணங்களில் இது செயல்பட்டது.
- ❖ திலகரின் இயக்கத்திற்கு ஆறு கிளைகள் ஒதுக்கப்பட்டன.
- ❖ தன்னாட்சி பற்றி பேசியதற்காக திலகர் தனது 60–வது வயதில் கைது செய்யப்பட்டார்.

**அன்னிபெசண்ட்**

- ❖ 1916 இல் அன்னிபெசண்ட் சென்னையில் தன்னாட்சி இயக்கத்தை தொடங்கினார்.
- ❖ இந்தியா முழுவதும் தன்னாட்சி கருத்துக்களை மக்களிடம் பரப்பினார்.
- ❖ இந்திய விசுவாசத்தின் விலை இந்தியாவில் விடுதலை என்று அறிவித்தார்.
- ❖ 1917 இல் அன்னிபெசன்ட் ஊட்டியில் கைது செய்யப்பட்டார்.

## அலகு 4 – காந்தியடிகள் தேசிய தலைவராக உருவெடுத்து மக்களை ஒன்றிணைத்தல்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. காந்தியடிகளின் சம்ரான் சத்தியாகிரகத்தின் போது உடன் சென்ற உள்ளூர் தலைவர்கள் யார்?

ராஜேந்திர பிரசாத் ஆச்சார்ய கிருபாளினி
மஜாருல் ஹக் மகாதேவ தேசாய்

2. இந்திய பணியாளர் சங்கம் ஏன் தோற்றுவிக்கப்பட்டது?
- ❖ இந்தியர்களுக்கு நல பணிகளில் பயிற்சி வழங்குதல்.
- ❖ நிவாரணம், கல்வி மற்றும் சமூக பணிகளில் பங்கெடுத்தல்.

3. பகிஷ்கிரித் ஹிதகர்ணி சபா குறித்து எழுதுக
- ❖ அம்பேத்கரால் தொடங்கப்பட்டது.
- ❖ தனித்து விடப்பட்டவர்களுக்கான அமைப்பு.

4. காந்தி இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எது?
- ❖ இந்தியர்களை விடுதலை செய்ய இர்வின் சம்மதித்தார்.
- ❖ சத்தியாகிரக பிரச்சாரத்தை கைவிட காந்தியடிகள் உறுதியேற்றார்.

### மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. ஜாலியன் வாலாபாக் படுகொலையை குறித்து குறிப்பு எழுதுக.
- ❖ ரௌலட் சட்டத்தை எதிர்த்த சத்தியபால், கிச்லு கைது செய்யப்பட்டனர்.
- ❖ 1919 அமிர்தசரஸ் நகரில் ஆர்பாட்டம் நடத்த மக்கள் கூடியிருந்தனர்.
- ❖ ஜெனரல் டயர் துப்பாக்கி சூடு நடத்த உத்தரவிட்டார்.
- ❖ 379 பேர் இறந்தனர்.
- ❖ தாகூர் தனது நைட் வுட் பட்டத்தை துறந்தார்.

2. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
- ❖ தீண்டதகாதோருக்கு தனி தொகுதிகள் வழங்கப்பட்டன.
- ❖ இதை எதிர்த்து காந்தியடிகள் எரவாடா சிறையில் உண்ணாவிரதம் இருக்க முயன்றார்.
- ❖ காந்தியடிகளின் உயிரை காப்பாற்றும் அழுத்தம் அம்பேத்கருக்கு ஏற்பட்டது.

3. மாற்றத்தை விரும்புவார்கள் மாற்றத்தை விரும்பாதவர்கள் வேறுபடுத்துக.

| | மாற்றத்தை விரும்புவர்கள் | மாற்றத்தை விரும்பாதவர்கள் |
|---|---|---|
| 1. | சித்தரஞ்சன் தாஸ், மோதிலால் நேரு | ராஜாஜி, வல்லபாய் பட்டேல், ராஜேந்திர பிரசாத். |
| 2. | தீவிர அரசியலுக்கு திரும்ப விரும்பினர். | காந்தியடிகள் வழியை பின்பற்றியது. |
| 3. | சுயராஜ்யம் வேண்டுவோர். | எந்த மாற்றமும் தேவையில்லைஎன விரும்பினர். |

வரலாறு

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியின் பங்கினை மதிப்பிடுக
    - ❖ சத்தியாகிரக வழியில் தனது போராட்டத்தை துவங்கினார்.
    - ❖ 1917 இல் சம்பரான் சத்தியாகிரகத்தை தொடங்கினார்.
    - ❖ 1918 இல் கேதா சத்தியாகிரகத்தை தொடங்கினார்.
    - ❖ 1919 இல் கிலாபத் இயக்கத்தை ஆதரித்து மாநாடுகளில் பங்கேற்றார்.
    - ❖ 1920 இல் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கினார்.
    - ❖ 1922 இல் சௌரி–சௌரா நிகழ்வால் ஒத்துழைப்பு இயக்கத்தை திரும்ப பெற்றார்.
    - ❖ 1930 இல் தண்டியாத்திரை சென்று சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்.
    - ❖ 1931 இல் காந்தி–இர்வின் ஒப்பந்தப்படி இந்தியர்கள் சிறையில் இருந்து விடுதலை
    - ❖ 1931 இல் லண்டனில் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் பங்கேற்றார்.
    - ❖ 1932இல் அம்பேத்கருடன் பூனா ஒப்பந்தம் செய்து கொண்டார்.

2. டாக்டர் அம்பேத்கரின் கல்விப் பணி குறித்து குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக நீதிக்காக அவரின் செயலூக்கத்தை முதன்மைப்படுத்தி விளக்குக
    - ❖ கல்வி மூலம் ஒடுக்கப்பட்ட மக்கள் சமூக அந்தஸ்தை அடைய முடியும் என்றார்.
    - ❖ சமத்துவம் மற்றும் சமூக நீதியை நிலை நாட்ட கல்வி அவசியம் என்று கருதினார்.
    - ❖ தீண்டாமையை ஒழிக்க பாடுபட்டார்.
    - ❖ ஒடுக்கப்பட்ட வகுப்பினர் உயர் கல்வி பயில கல்வி உதவித்தொகை கோரினார்.
    - ❖ மூக் நாயக் என்ற பத்திரிகையை தொடங்கினார்.
    - ❖ பகிஷ்கிரித் ஹிதகர்ணி சபையை தொடங்கினார்.
    - ❖ இந்த அமைப்பு தனித்து விடப்பட்டவர்களுக்கான அமைப்பு ஆகும்.
    - ❖ ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டு தந்தார்.

# அலகு 5 – ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்களில் புரட்சிகர தேசியவாதத்தின் காலம்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. மீரட் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளுக்கு ஆதரவாக வாதாடிய வழக்கறிஞர்களை அடையாளப்படுத்துக.
    - ❖ கே. எஃப். நாரிமன்
    - ❖ எம். சி. சக்லா

2. புகழ்பெற்ற கோரக்பூர் நீதிபதியான H.E. ஹோம்ஸ் பற்றி நீவீர் அறிவது யாது?
    - ❖ கோராக்பூரின் அமர்வு நீதிபதியாக பிரசித்தி பெற்றவர்.
    - ❖ சௌரி–சௌரா வழக்கில் 172 விவசாயிகளுக்கு மரண தண்டனை விதித்தார்.
    - ❖ கான்பூர் சதி வழக்கை விசாரித்தார்.

3. இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை என ஜே.என். டாடா அழைக்கப்பட காரணம் என்ன?
    - ❖ வணிக குடும்பத்தில் இருந்து வந்தவர்.
    - ❖ இந்தியாவில் முதல் தொழில் அதிபர்.
    - ❖ இந்தியாவின் நவீன தொழிற்சாலையின் தந்தை.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. சிட்டகாங் ஆயுதப்படை தாக்குதலை நடத்த சூர்யாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
   - ❖ கொரில்லா பாணி தாக்குதலை நடத்த திட்டமிட்டார்.
   - ❖ அவர்கள் பெரிதும் கிராமங்களில் இருந்து செயல்பட்டனர்.
   - ❖ சிட்டகாங் படைத்தளம் தகர்க்கப்பட்டது.

2. டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனம் பற்றி குறிப்பு எழுதுக
   - ❖ J.N. டாடா என்பவர் டாடா இரும்பு மற்றும் எஃகு நிறுவனத்தை தொடங்கினார்.
   - ❖ முதன் முதலில் சுதேசி இயக்கத்தின் ஒரு நிகழ்வாக இது அமைந்தது.
   - ❖ இரும்பு மற்றும் எஃகு துறையில் மிக உன்னத நிலையை அடைந்தது.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. பகத்சிங்கின் புரட்சிகர தேசியவாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரை தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது?
   - ❖ இளமை காலம் முதலே சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார்.
   - ❖ பகத்சிங்கின் 14ஆம் வயதில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்தது.
   - ❖ ரஷ்ய புரட்சியால் கவரப்பட்டார்.
   - ❖ புரட்சி என்பது மனிதகுலத்தின் பிரிக்க முடியாத உரிமை என கருதினர்.
   - ❖ மத்திய சட்டமன்றத்தின் மீது குண்டு வீசினார்.
   - ❖ ஆங்கிலேயரின் கொடுமைக்கு எதிராக புரட்சி நடவடிக்கையை மேற்கொண்டார்.
   - ❖ புரட்சி ஓங்குக என்ற முழக்கத்துடன் தூக்கினை எதிர்கொண்டார்.

# அலகு 6 – தேசியவாத அரசியலில் வகுப்புவாதம்

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. தனி தொகுதி முறையினை பற்றி எழுதுக
   - ❖ முஸ்லிம் வேட்பாளருக்கு முஸ்லிம்கள் மட்டுமே வாக்களிக்க முடியும்.
   - ❖ மிண்டோ–மார்லி சட்டம், முஸ்லீம்களுக்கு தனித் தொகுதி வழங்கியது.

2. ஆகாகான் தலைமையிலான முஸ்லிம் லீக் முன்வைத்த கோரிக்கைகள் என்ன?
   - ❖ அரசு பணிகளில் முஸ்லிம்களில் சதவீதத்தை உயர்த்துதல்.
   - ❖ உயர் நீதிமன்றங்களில் முஸ்லீம் நீதிபதிகளை நியமித்தல்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. 1921 இல் நடைபெற்ற மலபார் கலகத்தை பற்றி காந்தியடிகளின் கருத்து என்ன?
   - ❖ முஸ்லிம் விவசாயிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.
   - ❖ இந்து முஸ்லிம் மோதலாகவே காந்தியடிகள் மதிப்பிட்டார்.
   - ❖ முஸ்லிம் தலைவர்களை மன்னிப்பு கேட்க வேண்டுமென கோரிக்கை விடுத்தார்.

2. 1909 ஆம் ஆண்டு மின்டோ மார்லி சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை கூறுக.
   - ❖ முஸ்லிம்களுக்கு தனித் தொகுதி முறையை அறிமுகப்படுத்தியது.
   - ❖ மத்திய சட்டமன்றத்தில் 8 இடங்கள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டது.
   - ❖ மாகாண சட்டமன்றங்களில் மதராஸ்–4, மும்பை – 4, வங்காளம் – 5 ஆகிய இடங்களை வழங்கியது.

## அலகு 7 இந்திய தேசிய இயக்கத்தின் இறுதிக்கட்டம்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. லாகூர் தீர்மானத்தின் முக்கியத்துவம் என்ன?
   - ❖ முஸ்லிம்களுக்கு தனி நாடு கோரிக்கையை நிறைவேற்றியது.
   - ❖ இந்தியா – பாகிஸ்தான் பிரிவினையை வலியுறுத்தியது.

2. ஆகஸ்ட் நன்கொடையின் சிறப்பை கூறுக.
   - ❖ வரையறுக்கப்படாத தேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.
   - ❖ அரச பிரதிநிதி குழுவில் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
3. கிரிப்ஸ் முன்மொழிவை காங்கிரஸ் ஏன் நிராகரித்தது?
   - ❖ டொமினியன் அந்தஸ்து வழங்குதல் என்பது ஏமாற்றம் அளிப்பதாக கருதினர்.
   - ❖ இந்திய பிரிவினை பற்றிய முன்மொழிவை காங்கிரஸ் நிராகரித்தது.

### மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்காத அமைப்புகளின் பெயரை எழுதுக.
   - ❖ முஸ்லீம் லீக்
   - ❖ சிரோமணி அகாலிதளம்
   - ❖ இந்து மகாசபை

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போக்கினை விவாதிக்கவும்
   - ❖ 1942–ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை காந்தியடிகள் தொடங்கினர்.
   - ❖ காந்தியடிகள் மக்களை நோக்கி "செய் அல்லது செத்துமடி" என அழைப்பு விடுத்தார்.
   - ❖ 1942 ஆகஸ்ட் 9 அன்று காந்தியடிகள் உட்பட பலரை கைது செய்தனர்.
   - ❖ கடையடைப்புகள், மறியல்கள், வேலை நிறுத்தங்கள் வன்முறைகள் நடந்தன.
   - ❖ முதலில் நகரங்களிலும் பின்னர் கிராமங்களிலும் இயக்கம் பரவியது.
   - ❖ காவல் நிலையம், ரயில் நிலையம், அஞ்சல் அலுவலகங்கள் சேதப்படுத்தப்பட்டன.
   - ❖ பம்பாயில் ரகசியமாக வானொலி ஒளிபரப்பு முறையை உஷா மேத்தா நிறுவினார்.
   - ❖ இவ்வியக்கம் பெரிய அளவிற்கு மக்களின் பேராதரவை பெற்றது.

## அலகு 8 – காலனியத்திற்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. இணைப்பு உறுதி ஆவணம் பற்றி நீவீர் அறிவது யாது?
   - ❖ ஒரு சட்டப்பூர்வ ஆவணம்.
   - ❖ இந்தியா அரசு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.
2. அரசியலமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக.
   - ❖ அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவர் ராஜேந்திர பிரசாத்.
   - ❖ வரைவு குழுவின் தலைவர் அம்பேத்கர்.
3. ஜே.வி.பி. குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் என்ன?
   - ❖ மொழிவாரி மாநிலங்கள் குறுகிய பிராந்திய வாதத்தை வலியுறுத்தியது.
   - ❖ நாட்டின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலை உருவாக்கும்.

**மூன்று மதிப்பெண் வினாக்கள்**

1. இந்திய அரசியலமைப்பின் தனித்தன்மைகள் யாது?
   - ❖ அடிப்படை உரிமைகள்
   - ❖ வயது வந்தோர்க்கு வாக்குரிமை
   - ❖ சட்டம் இயற்றும் அதிகாரம்
   - ❖ தேர்தல் ஆணையம்
   - ❖ நீதித்துறையின் சுதந்திரம்
2. பஞ்சசீல கொள்கையில் ஐந்து கோட்பாடுகள் யாவை?
   - ❖ இறையாண்மையை மதித்து நடத்தல்.
   - ❖ ஆக்கிரமிப்பு இல்லாமல் இருத்தல்.
   - ❖ பிற நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.
   - ❖ சமத்துவம் மற்றும் கூட்டுறவு.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. சுதேச அரசுகளை இந்திய ஒன்றியத்துடன் இணைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனைகள் என்ன? அவற்றை எவ்வாறு திறமையாக பட்டேல் மற்றும் நேரு கையாண்டனர் என்பதை விளக்குக.
   - ❖ ஹைதராபாத் காவல்துறை நடவடிக்கை மூலம் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.
   - ❖ காஷ்மீர் அரசர் ஹரிசிங் இந்தியாவுடன் இணைய மறுத்து வந்தார்.
   - ❖ பாகிஸ்தானியர்கள் காஷ்மீரை சூறையாடுவதை ஹரிசிங்கால் தடுக்க முடியவில்லை.
   - ❖ காஷ்மீர் இந்தியாவோடு இணைந்தது.
   - ❖ ஜூனாகத் மக்களிடம் வாக்கெடுப்பு நடத்தி இந்தியாவுடன் இணைக்கப்பட்டது.
   - ❖ இந்தியா முழுவதும் உள்ள சுதேசி அரசுகள் ஒன்றிணைக்கப்பட்டன.

## அலகு 9 – ஓர் புதிய சமூக பொருளாதார ஒழுங்கமைவை எதிர்நோக்குதல்

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. சமதர்ம சமூக அமைப்பு என்பதை பற்றி நீ அறிந்ததென்ன?
   - ❖ ஏற்றத்தாழ்வுகளை குறைப்பது.
   - ❖ சுரண்டலை ஒழிப்பது.
   - ❖ கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு.
2. பூமிதான இயக்கம் பற்றி எழுதுக.
   - ❖ வினோபா பாவே தொடங்கினார்.
   - ❖ நில உடைமையாளர்கள் உபரியாக உள்ள நிலங்களை தானமாக வழங்கினர்.

**மூன்று மதிப்பெண் வினாக்கள்**

1. இந்தியாவில் பசுமை புரட்சியின் விளைவு யாவை?
   - ❖ உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.
   - ❖ நெல், கோதுமை, பால், முட்டை உற்பத்தி அதிகரிப்பு.
   - ❖ உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து தொழிற்சாலைகள் வளர்ச்சி பெற்றன.
2. இந்திய வேளாண்மையின் பின் தங்கிய நிலைக்கான காரணங்கள் யாவை?
   - ❖ நிறுவனம் சார்ந்த காரணிகள்: நிலவுடைமை.
   - ❖ தொழில்நுட்பம் சார்ந்த காரணிகள்: ரசாயன உரங்கள், நவீன இயந்திரங்கள் பயன்படுத்தியமை.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. சுதந்திர இந்தியாவில் ஏற்பட்ட கல்வி முன்னேற்றம் குறித்து மதிப்பிடுக.
   - ❖ 1951இல் 18.3% இருந்த எழுத்தறிவு 2011 இல் 74% உயர்ந்துள்ளது.
   - ❖ ஆண்களில் 82%, பெண்களில் 65% எழுத்தறிவு பெற்றுள்ளனர்.
   - ❖ அரசு பள்ளிகள் கல்லூரிகள் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்தது.
   - ❖ தனியார் பள்ளிகள், கல்லூரிகள் ஊக்குவிக்கப்பட்டது.
   - ❖ இடைநிற்றல் ஏழை குடும்பங்களில் அதிகமாக இருந்தது.
   - ❖ இடைநிற்றலை தவிர்க்க அனைவருக்கும் கல்வித் திட்டம் உருவானது.

2. முதல் இரண்டு ஐந்து ஆண்டு திட்டங்களின் சாதனைகளை மதிப்பிடுக.

   **முதலாவது ஐந்தாண்டு திட்டம் (1951–56):**
   - ❖ வேளாண் உற்பத்தியில் கவனம்.
   - ❖ 31% முதலீடு வேளாண்மைக்கும் நீர் பாசனத்திற்கும் ஒதுக்கீடு.
   - ❖ பின்னர் தொழில்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

   **இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் (1956–61)**
   - ❖ மகலனோபிஸ் திட்டம் என அறியப்படுகிறது.
   - ❖ கனரக தொழிற்சாலைகளுக்கு முக்கியத்துவம்.
   - ❖ தொழில்துறையின் பங்கு 24% உயர்ந்தது.

   **சாதனைகள்:**
   - ❖ முதல் இரண்டு திட்டங்களும் 4% வளர்ச்சி பெற இலக்கு.
   - ❖ 4% சதவீத வளர்ச்சியை அடைந்ததால் இவை வெற்றி பெற்ற திட்டங்கள் ஆகும்.

## அலகு 10 – நவீன உலகம் : பகுத்தறிவின் காலம்

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. பிளாரன்ஸின் மெடிசி குடும்பம் பற்றி குறிப்பு வரைக.
   - ❖ சக்தி வாய்ந்த வர்த்தக குடும்பம்.
   - ❖ மைக்கேல் ஆஞ்சிலோ, டாவின்சி போன்ற கலைஞர்களை ஆதரித்தனர்.

**மூன்று மதிப்பெண் வினாக்கள்**

1. மறுமலர்ச்சியின் தாயகமாக இத்தாலி விளங்கியது ஏன்?
   - ❖ ரோமானிய மூதாதையர்கள் வழி தோன்றலில் வந்தவர்கள்.
   - ❖ சமய சார்பின்மை கலாச்சாரம் நடைமுறையில் இருந்தது.
   - ❖ இலத்தீன் மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களைக் கண்டுபிடித்தனர்.

## அலகு 11 – புரட்சிகளின் காலம்

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்தது என்ன?
   - ❖ 100 கிளர்ச்சியாளர்கள் அமெரிக்க பூர்வக்குடிகளைப் போல் வேடம் தரித்தனர்.
   - ❖ மூன்று கப்பல்களிலுள்ள 342 தேயிலைப் பெட்டிகளை கடலுக்குள் வீசினர்.
2. சரடோகா போரின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.
   - ❖ அமெரிக்க சுதந்திர போரில் திருப்புமுனையாக அமைந்தது.
   - ❖ ஆங்கில படைகள் தோல்வி அடைந்தது.
   - ❖ ஜென்ரல் புர்கோய்ன் சரணடைந்தார்.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. செப்டம்பர் படுகொலை எதனால் ஏற்பட்டது?
   - ❖ 1792 இல் நடைபெற்றது.
   - ❖ அரச குடும்ப ஆதரவாளர்கள் கொல்லப்பட்டனர்.
   - ❖ பாரீஸ் நகர சிறைகளில் படுகொலைகள் நடத்தப்பட்டன.
   - ❖ 1200 கைதிகள் கொல்லப்பட்டனர்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. அமெரிக்கா விடுதலை போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

**காரணங்கள்:**
- ❖ நாவாய் சட்டங்கள்
- ❖ சர்க்கரை சட்டம் – 1764
- ❖ முத்திரை சட்டம் – 1765
- ❖ டவுன்ஷெண்ட் சட்டம் – 1767
- ❖ பாஸ்டன் படுகொலை – 1770
- ❖ பாஸ்டன் தேநீர் விருந்து – 1773
- ❖ மூன்றாம் ஜார்ஜ்க்கு ஆலிவ் கிளை விலை விண்ணப்பம் அளிக்கப்பட்டது.
- ❖ மன்னர் அதை நிராகரித்தார்.

**போக்கு**
- ❖ ஆங்கிலப் படைகளுக்கு வில்லியம் ஹோவ் தலைமை தாங்கினார்.
- ❖ அமெரிக்க படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.

**விளைவுகள்**
- ❖ பாரிஸ் உடன்படிக்கைப்படி இங்கிலாந்து அமெரிக்காவுக்கு சுதந்திரம் வழங்கியது.
- ❖ ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசு தலைவரானார்.
- ❖ மக்களாட்சி குடியரசு கோட்பாடுகள் பரவியது.

# அலகு 12 – ஐரோப்பாவில் அமைதியின்மை

## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. இத்தாலியை மெட்டர்னிக் "வெறும் பூகோள வெளிப்பாடே" என ஏன் கூறினார்?
   - ❖ வியன்னா காங்கிரசால் இத்தாலி எட்டு மாநிலங்களாக பிரித்தனர்.
   - ❖ வடக்கு பகுதி ஆஸ்திரியர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது.
2. இரவலர் சட்டங்கள் பற்றி விவரமாக எழுதுக.
   - ❖ பிரிட்டனில் எலிசபெத் அரசியின் ஆட்சியில் இயற்றப்பட்டது.
   - ❖ முதியோர்கள், நோயாளிகள், குழந்தைகளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

## மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. பிரான்ஸ் தும்மினால் ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் தெளிவுபடுத்துக.
   - ❖ மெட்டர்னிக்கின் புகழ்பெற்ற கூற்று.
   - ❖ பிரெஞ்சுப் புரட்சியின் தாரக மந்திரம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்.
   - ❖ பிரான்சில் பல நிகழ்வுகள் நடைபெற்றன.
   - ❖ ஐரோப்பா முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

## அலகு 13 – ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. மூன்றாவது ரெய்ச் என்றால் என்ன?
   - ❖ ஹிட்லரின் நாஜி அரசு ஆகும்.
   - ❖ பாராளுமன்ற மக்களாட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

### மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
   - ❖ முதல் உலகப்போரின் போது அறிமுகம்.
   - ❖ போர் வீரர்களால் தோண்டப்பட்டது.
   - ❖ உடலையும் உயிரையும் பாதுகாக்க அகழிகளை தோண்டினர்.
   - ❖ உணவு, வெடிப்பொருட்கள், கடிதம் பரிமாற்றம் செய்யப்பட்டன.

### ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. முதல் உலகப்போரின் காரணங்களையும் விளைவுகளையும் கணக்கிடுக.

**காரணங்கள்:**

- ❖ ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி இணைந்து மூவர் கூட்டணி உருவானது.
- ❖ பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா இணைந்து முக்கூட்டு நட்பு உருவானது.
- ❖ போஸ்னியாவை இணைப்பதாக ஆஸ்திரியா அறிவித்தது.
- ❖ முதல் பால்கன் போரில் துருக்கி தோல்வி அடைந்தது.

**உடனடி காரணம்**

- ❖ ஆஸ்திரியா இளவரசர் போஸ்னியாவில் கொல்லப்பட்டார்.
- ❖ ஆஸ்திரியா செர்பியாவை தாக்கியது.
- ❖ இதனால் முதல் உலகப்போர் தொடங்கியது.

**விளைவுகள்:**

- ❖ பாரிஸ் அமைதி மாநாட்டின் மூலம் முதல் உலகப்போர் முடிவுக்கு வந்தது.
- ❖ பன்னாட்டு சங்கம் உருவாக்கப்பட்டது.

## அலகு 14 – இரண்டாம் உலகப்போரும் காலனிய நாடுகளில் அதன் தாக்கமும்

### இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. ரோம்–பெர்லின் அச்சின் உருவாக்கத்திற்குப் பின்புலமாக அமையப்பெற்றது எது?
   - ❖ முசோலினியின் எத்தியோப்பியப் படையெடுப்பை பிரிட்டனும், பிரான்சும் கண்டித்தது.
   - ❖ ஹிட்லர் இத்தாலியோடு நெருங்கிய நட்பை வளர்த்துக் கொண்டார்.
   - ❖ இதுவே ரோம்–பெரிலின் அச்சின் துவக்கமாகும்.
2. பேர்ல் துறைமுகத்தை ஜப்பான் தாக்கியதின் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தி எழுதுக.
   - ❖ அமெரிக்கா ஜப்பான் மீது போர் பிரகடனம் செய்தது.
   - ❖ இது முழுமையான இரண்டாம் உலகப்போருக்கு வழிவகுத்தது.

### மூன்று மதிப்பெண் வினாக்கள்

1. இரண்டாம் உலகப் போரில் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.
   - ❖ ஆறு கோடி மக்கள் இறந்தனர்.
   - ❖ உலகம் இரு அணிகளாக பிரிந்தது.
   - ❖ மன்னராட்சி முடிவுக்கு வந்தது.
   - ❖ ஐநா சபை தோன்றியது

# அலகு 15 – இரண்டாம் உலகப்போருக்கு பிந்தைய உலகம்



## இரண்டு மதிப்பெண் வினாக்கள்

1. கோமிங்பார்ம் குறித்து நீங்கள் அறிவதென்ன?
    - ❖ சோவியத் ரஷ்யா கோமிங்பார்ம் அமைப்பை உருவாக்கியது.
    - ❖ கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர்.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டு காட்டவும்.
    - ❖ மனித உரிமைகளை மதித்தல்.
    - ❖ ஐநா சபையின் கொள்கைகளை மதித்தல்.
    - ❖ நாடுகளின் இறையாண்மையை மதித்தல்.
    - ❖ பிற நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடாமல் இருத்தல்.
    - ❖ பன்னாட்டு பிரச்சனைகளுக்கு அமைதியான வழியில் தீர்வு காணுதல்.
    - ❖ நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.

# காலக்கோடுகள்

**1. 1900 முதல் 1920 வரை இந்திய விடுதலைப் போரின் முக்கிய நிகழ்வுகள்**




**2. 1920 முதல் 1950 வரை இந்திய விடுதலைப் போரின் முக்கிய நிகழ்வுகள் (காந்திய விடுதலை போராட்ட நிகழ்வுகள்)**



**3. அமெரிக்க விடுதலைப் போரின் முக்கிய நிகழ்வுகள்.**




**4. இரண்டாம் உலகப் போரின் முக்கிய நிகழ்வுகள்**



## வரைபடங்கள்

### இந்திய தேசிய காங்கிரஸ் நடைபெற்ற இடங்கள் –1



இந்திய தேசிய காங்கிரஸ் நடைபெற்ற இடங்கள் - II



**இந்திய தேசிய இயக்கம் (1917-1930)**




WORLD
உலகம்
வ
கி
தெ
மே
இங்கிலாந்து
(or)
பிரிட்டன்
மாஸ்கோ
ஜெர்மன்
ருமேனியா
ரஷ்யா
ஜப்பான்
ஹிரோஷிமா
நாகசாகி
துருக்கி
கிரீஸ்
பிரான்ஸ்
இத்தாலி
செர்பியா
அமெரிக்கா
சான்பிரான்சிஸ்கோ
ஹவாய் தீவுகள்



**திரு. குழந்தை பிரான்சிஸ்**
**ஐ.வி.டி.பி நிறுவனர் - தலைவர்**

திரு. **குழந்தை பிரான்சிஸ்** என்னும் மாமனிதர் சேலம் மாவட்டத்தின் காரிப்பட்டி அருகிலுள்ள மின்னாம்பள்ளி **அக்ரஹாரம்** என்ற சிற்றூரில் **1946** ஆம் ஆண்டு திரு. **குழந்தை** மற்றும் திருமதி. **மதலைமேரி** தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார்.

ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்த இவர், இளமையிலேயே இயல்பாகவே அனைவருக்கும் பணிபுரிவதில் நாட்டமும், அதற்காக தன்னையே அர்ப்பணிக்கவும் துணிவு கொண்டார்.

கல்வியின் மேல் இருந்த ஆர்வத்தைக் கண்ட இவரது பெற்றோர், தங்களுக்கிருந்த சிறு விவசாய நிலத்தையும் விற்று இவரை சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்த்தனர். அங்கு இளங்கலை வணிகவியல் கற்றுத் தேர்ந்தார். பின் வாழ்க்கையின் அடுத்த கட்டம் என்ன என்ற தீவிர சிந்தனையில் ஆழ்ந்தார். மக்கள் பணி ஆற்றி வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற உள்ளுணர்வு இவரை ஆட்கொண்டது. ஆகவே திருச்சிலுவை குருக்கள் சபையில் சேர்ந்து சமூக நலப்பணியும், ஆன்மிகப்பணியையும் செய்வதற்காக 5 வருடங்கள் முழுமையாக பயின்றார். இந்த 5 வருடத்தில் அகதிகள் பணி, போர்கள மருத்துவ பணி, இளைஞர் முகாம், மலைவாழ் மக்கள் பணி என்று இவருடைய சேவை பல முகம் கண்டது.

**1975**ம் ஆண்டு கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி பகுதியில் உள்ள நாட்றாம்பாளையம் என்ற மலைக்கிராமத்தில் களப்பணியில் ஈடுபட்டிருந்த பொழுது, அங்கு பொருளாதாரம், சுகாதாரம் இன்றி மக்கள் பட்ட வேதனைகளைக் கண்கூடாகக் கண்டார். அந்தப்பகுதி மக்களின் துன்பங்களை நன்கு அறிந்த இவர் அவர்களுடைய உண்மையான அன்பினாலும் பாசத்தினாலும் ஈர்க்கப்பட்டு அவர்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டார்.

**1979**ம் ஆண்டு ஐ.வி.டி.பி எனும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை உருவாக்கினார். தமிழகத்தில் முதன்முதலாக ஆண்கள் சுய உதவிக் குழுக்களை நாட்றாம்பாளையத்தில் உருவாக்கிய இவர் தன்னுடைய முயற்சியில் சறுக்கலே கண்டார். சறுக்கலால் தளர்ந்து விடாமல் மகளிர் சுய உதவிக்குழுவை உருவாக்கினார்.

அவ்வாறு துவங்கப்பட்ட சுய உதவிக்குழுக்கள் இன்று ஆலமரமாய் வளர்ந்து கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் **2,90,628** மகளிரை உறுப்பினர்களாக கொண்ட **16,152** சுய உதவிக்குழுக்களாக பரந்து விரிந்துள்ளது.

## ஐ.வி.டி.பி யின் பணிகள்:

- தடுப்பணைகள்
- மகளிர் சுய உதவிக் குழுக்கள்
- கல்விச் சேவைகள்
- கோட்டையூரில் இயங்கி வரும் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
- சுய உதவிக்குழுக்களுக்கான பிரத்தியேக வங்கி மற்றும் தொழிற்பயிற்சி மையம்
- பெற்றோரை இழந்த மாணவர்களுக்கான கல்லூரி கல்வி உதவித்தொகை
- ஐ.வி.டி.பி உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை,
- அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வெற்றி நம் கையில் வினா விடை கையேடு,
- வண்ண தொலைக்காட்சிப் பெட்டிகள் உள்ளிட்ட கல்விச் சேவைகள் சுகாதாரத் திட்டங்கள் (சோலார், நேப்கின்)
- சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கான புற்றுநோய் கண்டறிதல் மற்றும்
- இலவச சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள்

### <u>இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ்</u>

"**நீ எந்த விதமான உலகத்தைப் பார்க்க விரும்புகிறாயோ அது போலவே நீ மாறு**" எனும் காந்தியடிகளின் வரிகளுக்கிணங்க, கடந்த **49** ஆண்டு கால பொது வாழ்வில் சமூகத்திற்கு சிறந்த முன்னோடியாய், அப்பழுக்கற்ற மனிதராய், நெறிதவறாத நேர்மையானவராய், ஓயாமல் உழைக்கின்ற இவருக்கு குவிந்திருக்கின்ற விருதுகள் ஏராளம்! இவ்விருதுகள் அனைத்திற்கும் மணிமகுடமாய், ஆசியாவின் நோபல்பரிசு என்று அழைக்கப்படக்கூடிய இராமன் மகசேசே விருது வழங்கப்பட்டிருக்கின்றது.

2012ம் ஆண்டு ஆகஸ்ட் 31ல் மணிலாவில் **இராமன் மகசேசே விருது** பெற்ற போது இவர் உதிர்த்த வார்த்தைகள் "எல்லாப்புகழும் இந்தியப் பெண்களுக்கே" இவ்வாறு அவர் உருவாக்கிய ஐ.வி.டி.பி எனும் மாபெரும் நிறுவனத்தில் **2,90,628** மகளிரை உறுப்பினர்களாக கொண்டு அவர்களை வறுமையின் பிடியிலிருந்து மீட்டு அவர்களை பொருளாதார மேம்பாட்டினை அடைய செய்வதையே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு செயலாற்றியதற்காக வழங்கப்பட்ட அங்கீகாரமே இவ்விருதாகும்.

## இராமன் மகசேசே விருது – விளக்கம்

பிலிப்பைன்ஸ் அரசினால் பல்வேறு ஆய்வுகளுக்கு பிறகு அரசுப்பணி, பொது சேவை, சமூக தலைமை, இதழியல், இலக்கியம் மற்றும் மக்கள் தொடர்பு கலை, அமைதி மற்றும் பன்னாட்டு புரிதல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கும் தனிமனித முயற்சிக்காக இந்த இராமன் மகசேசே விருது வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இப்பரிசு 'தங்கள் சுற்றுப்புறத்தில் சமூக மாற்றங்களை ஏற்படுத்தி சிறப்பாக பணியாற்றிய, ஆனால் வெளியே அதிகம் அறியப்படாத தனிநபர்களுக்கு வழங்கப்படுகிறது.

அங்ஙனம் சாதாரண பெண்களின் மாண்பை, தனிச்சிறப்பை, சக்தியை உணர்ந்த நமது ஐ.வி.டி.பி நிறுவனர் முழுவதுமாக மகளிரைக் கொண்டே சுய உதவிக்குழுக்களை நடத்தி வருகிறார். கிராமப்புறங்களில் அதிகம் கல்வி பெற முடியாத பெண்களே இன்று குழு வழி நடத்துனர்களாக, ஒருங்கிணைப்பாளர்களாக, பயிற்சியாளர்களாக, தணிக்கை ஊழியர்களாக பணிபுரிவதே மாபெரும் வெற்றியாகும். இவ்வாறு மாற்றத்தினை கொண்டு வந்ததன் அடிப்படையிலேயே இவருக்கு **இராமன் மகசேசே விருதினை** பிலிப்பைன்ஸ் அரசு வழங்கி கௌரவித்தது.

## இராமன் மகசேசே விருது பெற்றவர்கள் விவரம்

இந்தியாவிலிருந்து இதுவரை 52 சாதனையாளர்கள் இராமன் மகசேசே விருதைப் பெற்றுள்ள நிலையில், தமிழகத்திலிருந்து கீழ்க்கண்ட மதிப்பிற்குரிய நபர்கள் இவ்விருதைப் பெற்றுள்ளனர்.

1. திரு. M.S.சுவாமிநாதன் - 1971
2. திருமதி. M.S.சுப்புலட்சுமி – 1974
3. திருமதி. அருணாராய் - 2000
4. மருத்துவர் சாந்தா – 2005
5. திரு. பாலகும்மி சாய்நாத் - 2007
6. திரு. குழந்தை பிரான்சிஸ் - 2012
   (ஐ.வி.டி.பி நிறுவனர்)
7. மருத்துவர் ரவி கண்ணன் - 2023



இன்று உங்கள் கைகளில் தவழுகின்ற "**வெற்றி நம் கையில்**"என்ற இலவச புத்தகமும் இவர் ஏழை மாணவர்களுக்கு செய்து வருகின்ற எண்ணற்ற உதவிகளில் ஒன்றுதான். இதைப்படித்து பயன் பெறுகின்ற இலட்சக்கணக்கான மாணவர்களை இவர் கேட்டுக் கொள்வது கடமைகளைச் செய்யுங்கள். வாழ்க்கையில் முன்னேறுங்கள். சமுதாயத்தில் மற்றவர்களுக்கு உதவுங்கள் என்பது தான். இராமன் மகசேசே குழந்தை பிரான்சிஸ் அவர்களின் வாழ்வை முன்மாதிரியாக கொள்வோம், நாமும் வாழ்வில் உயர்வோம்.